என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

லண்டனில் தரமான பொருள்கள்
நிரு

January- February 2018
FREE ISSUE



# லண்டன் தமிழர் தகவல்

London Tamil's Information

# பொங்கல் நல் வாழ்த்துகள்



மாதாந்திர செய்திச் சஞ்சிகை
A monthly information digest

**subara**
THE SMART CHOICE




- Accident Protection
- Block Management
- Building Maintenance
- Critical Illness Cover
- Home Insurance
- Income Protection
- Landlord's Cover
- Life Insurance
- Recruitment
- Security Systems
- Utility Services

Ask our staff for
more information

020 3823 1061
info@subara.co.uk
www.subara.co.uk

Subara Business Centre
4 Weald Lane
Harrow HA3 5ES


BRINGING
GREAT
FOOD
TO
LIFE...
Crab Curry
Mackerel Curry
FALUDA
Nelli
ORANGE SODA
Quento
Niru BRAND
Nelli
Flavour Drink/ Boisson de saveur
NO 1 Brand
BRAND Niru
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk



# தமிழர் தகவல்
## Tamil Information

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்

திருவள்ளுவர் ஆண்டு 2048

**தை-மாசி**

மலர் : 17

இதழ் : 176

**ஜனவரி-பிப்ரவரி - 2018**

முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

**கணக்கு எண் : 29513668**
**வங்கி இலக்கம் : 77 91 29**
**வங்கி : Lloyds TSB**

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
**தமிழ் அலை**
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com

படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே

4000 பிரதிகள்

தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!

UNLEASH
THE POWER OF GOLD
THARANI

JEWELLERY & PAWNBROKERS
STARTING FROM 2.95% PER MONTH

GOLD LOANS
THE CHEAPEST GOLD
LOAN PROVIDEDR IN WEMBLEY

* NO Need to Sell Your Valuable Jewellery, When You can Get Quick Loan and Easy Terms.
* Use Your Idle Jewellery for Productive Purpose by Availing Our Loans.
* Loans Against Gold from 2.95% per Month, it's U.K's lowest Rate for Gold Loans.
* Cheaper than Unauthorised Overdrafts from High Street Banks.
* No Credit Check Required
* Simple Procedure. Loan sanctioned in Just 5 Minutes.

Our Rates of Interest

£100 to £4999 2.95 % Per Month
APR 38.7%

Loan Term: Up to 6 Months
Documents Required
Photo ID - Passport or UK Driving Licence
Proof of Address - Any Utility Bill or Bank Statement not Older than 3 Months

Terms and Conditions

The maximum loan term is for 6 months. If loan cannot be repaid during this period, a renewable can be made, after interest on the loan is paid in full.

If you have borrowed £75 or less, and if you redeem the loan in 6 months time,we will keep the pledged Gold. If you have borrowed more than £75 we are entitled to sell your pledge to cover the outstandings. The pledge

வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!



Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட
இணைப்புச் சந்தா
£69
SET TOP BOX
INCLUDED
புதுப்பித்தல்
£49
14 மாதங்கள்
LycaTV App ஐ
Download செய்து
பார்வையிடலாம்
ஒரு மாதச் சந்தா
£4.99
மட்டுமே
App Store
tv
Roku
AirPlay
chromecast
SMART TV
LG Smart
android
amazon fireTV
kindle fire
XBOX
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
விஜய்
தமிழ்
KTV
7000க்கும் அதிகமான TAMIL & HINDI திரைப்படங்கள்
SUBSCRIBE NOW!
0207 132 2727
FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.
www.lycatv.tv



கீரிமலை சிவன் கோயில் அறக்கட்டளை
(பிரித்தானியா)
KEERIMALAI SIVAN KOVIL TRUST
(UNITED KINGDOM)
இராஜகோபுர திருப்பணி நிதிக்காக
Entry
Single £ 20.00
Family £ 50.00
VIP £ 100.00
இன்னிசை மாலை
21 APRIL 2018
SATUARDAY
Door Open:
AT 5.00 PM
நிக்கில் மேத்தியூ
(சுப்பர் சிங்கர்)
சோனியா
(சுப்பர் சிங்கர்)
Programe Start: AT 5.30 PM
Dr.Navaratnam: 07956579239 | Dr.Sivakumar: 07788415927
Thamboo: 07861393295 | Ram: 07956369557
CORELLI COLLEGE, CORELLI ROAD, BLACKHEATH, LONDAN - SE3 8EP
www.naguleswaram.org
For Further Details: all the names in the attachhed sample flyer

25 வது ஆண்டு

## ஸ்ரீமதி யோகா தில்லைநாதன்
## வழங்கும் **வெள்ளி விழா** நிகழ்வு

# கானக்குயில் 2018

**நாள் : 30.06.2018 சனிக்கிழமை, மாலை 6.00 மணிக்கு**

போட்டியில் பங்குபெற உங்கள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

**பால கானக்குயில்**
8 - 12 வயதிற்குள்

**இளைய கானக்குயில்**
12 - 16 வயதிற்குள்

**கானக்குயில்**
16 வயதிற்கு மேல்

**விண்ணப்ப முடிவு தேதி : 15 மார்ச் 2018**

போன் : 02034898309 | மொபைல் : 07903327708 | Email : arumthill@hotmail.com



# கண்ணீர் அஞ்சலி


















அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவரும், பல இந்து சமய
அறநிலையங்களின் தலைவரும், தமிழ் மக்களுக்காக சட்டவல்லுனராக,
பல வழிகளில் ஆலோசகராகவும், தலைசிறந்த சட்டத்தரணியாகவும்,
யாழ் இந்துக் கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் போசகராகவும்,
வத்தளை இந்து மன்றம் ஸ்தாபிப்பதற்கு முன்னின்று ஒத்துழைத்த,
சைவமத பெருந்தகை,
அமரர்.கந்தையா நீலகண்டன்
அவர்களுக்கு
வத்தளை வாழ் இந்து மக்களின்
கண்ணீர் அஞ்சலி

# அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களுக்கு
# கண்ணீர் அஞ்சலி







# வெளிநாட்டில் கோயில்கள்

## நா. சிவானந்தசோதி

அண்மையில் அமெரிக்காவில் ஒரு புதிய கோயில் கட்டியிருப்பதாகச் செய்தி பார்த்தேன். பென்சில்வேனியா என்ற மாகாணத்தில், சுவாமி நாராயணன் கோயில் சுமார் 162 ஏக்கர் நிலப்பரப்பில் பிரமாண்டமாகக் கட்டப்பட்டுள்ளது. பலகோடி பணச்செலவில் கட்டியுள்ளார்கள். பலரும் பாராட்டுகிறார்கள். இந்தக் கோயிலைக் கட்டியவர்களுக்கு, சைவ சமயத்தில் உள்ளதுபோல, வேதசிவாகம முறைகள், கட்டுப்பாடுகள் இருப்பதுபோலக் போலக் கோயில் கட்டுவதற்கு, கட்டுப்பாடுகள் இருக்கின்றனவா என்று தெரியவில்லை. ஆனால், அவர்களிம் பணம் இருக்கிறது, சமூக ஒற்றுமை இருக்கிறது. ஆள்பலம் இருக்கிறது. அதனால் கட்டுகிறார்கள். தொண்டர்களே கட்டுகிறார்கள். ஒரு பளிங்கு மாளிகைபோல அந்தக் கோயில் இருக்கிறது.

தமிழர்களாகிய எங்களைப் பொறுத்தவரை இதுபோல, பிரமாண்டமாக நாம் கோயில் கட்டவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் எங்கள் கோயில் அமைப்பு வித்தியாசமானது. ஆனால் எங்களால் நல்ல கோயில், எங்கள் முறைக்கு ஏற்பக் கட்ட இயலாது. நம்மிடையே ஒற்றுமை கிடையாது என்பது இதற்கு ஒரு காரணம். ஒருவர் கோயிலை ஆரம்பிப்பார். அவருடன் சிலர் சேர்ந்து செயலாற்றுவார்கள். பின் செயற்குழுவில் சண்டை ஆரம்பிக்கும். ஒன்றில் ஆரம்பித்தவரை வெளியேற்றிவிட்டு தாங்கள் அந்தக் கோயிலை நடத்துவார்கள். அல்லது பிரிந்துபோய் வேறு கோயில் ஆரம்பிப்பார்கள். அல்லது வெளியேற்றப்பட்டவர் வேறுசில நண்பர்களுடன் சேர்ந்து ஒரு கோயில் ஆரம்பிப்பார்கள். இதுதான் கடந்த சில வருடங்களாக இந்த நாட்டில் நடந்துவருகிறது. லண்டனிலும் சுற்றுப் புறங்களிலுமுள்ள கோயில்கள் புற்றீசல்கள் போலத் தோன்றுவதைப் பார்த்தாலே இந்த உண்மை விளங்கும். ஐக்கிய இராய்ச்சிய நாட்டில் மட்டுமன்றி, ஏனைய வெளிநாடுகளிலும் இதுபோலக் கோயில்களை நம்மவர்கள் கட்டிக்கொண்டே

இருக்கிறார்கள். இது எங்கே போய் முடியும் என்று தெரியவில்லை. சில கோயில்களில் தற்போது ஆட்சிக்குழுவில் இருப்பவர்களின் பிள்ளைகளே கோயிலுக்கு வருவதில்லை. அடுத்த தலைமுறையினர் கோயிலை எப்படிப் பேணுவார்கள் என்பது பெரிய கேள்விக்குறி.

சைவசமயத்தில், கோயில்கள் கட்டுவதென்றால், அதற்கெனச் சில வழிமுறைகள் இருக்கின்றன. சிவாகம முறை இருக்கிறது. அமைப்பின் அளவு, உள்ளே இருக்கும் மூர்த்தங்களின் அளவு, வீதி அமைப்பு என்று பல விடயங்களை நாம் கருத்தில் கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை, இந்நாட்டில் உள்ள பல கோயில்களில், ஒரு கோயில்கூட சரியாக அமைந்திருக்கிறது என்று ஒப்புக்கொள்ள முடியவில்லை. இங்குள்ள எல்லாக் கோயில்களிலும் சிவனை ஒரு மூலையில் வைத்துவிட்டு மற்றைய மூர்த்தங்களுக்கு முக்கியம் கொடுக்கிறார்கள். இது மிகப் பிழையான செயல் என்று கருதுகிறேன். இது எதைப்போல இருக்கிறது என்று சிந்தித்தால், ஓர் அலுவலகத்தில் பெரிய அதிகாரியை மூலையில் இருத்திவிட்டு அவருக்குக் கீழே வேலை செய்பவர்கள் அனைவரையும் முன்னிலைப்படுத்தி இருத்தினால் எப்படி இருக்கும் என்பதுபோலத்தான். சிவன்கோயில்களில் மற்றைய மூர்த்தங்களை பரிவாரத்தில் வைத்து பிரதிட்டை செய்து வழிபடலாமேயொழிய, மற்றைய மூர்த்தங்கள் பிரதானமாக உள்ள கோயிலில் சிவனைப் பின்னால் வைத்து வழிபடுவது பாவமான செயல், பொருத்தமற்ற செய்ல என்றே நான் கருதுகிறேன். மோட்ச அர்ச்சனை செய்வதற்கென்றே சிவமூர்த்தத்தை ஒரு வருவாய்தரும் பொருளாகவே வைத்திருக்கிறார்கள் என்று கருதவேண்டியுள்ளது.

நான் 1967ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டிலுள்ள பல கோயில்களுக்குப் போய் வந்து கொண்டிருக்கிறேன். ஈழத்திலும் பல கோயில்களுக்குப் போயிருக்கிறேன். சிவன்கோயில் அல்லாத கோயில்களில், அதாவது பிள்ளையார் கோயில், முருகன் கோயில், துர்க்கை கோயில் என்றுள்ள சிறு சிறு கோயில்கள் பல இருக்கின்றன. என் அறிவுக்கு எட்டியவரை அந்தக் கோயில்களில் சிவனை ஒரு மூலையில் வைத்து வழிபடுவதை நான் என்றுமே பார்த்ததில்லை.

எங்கள் ஊரிலும் தமிழ்நாட்டிலும் வரலாறுகளைப் பார்த்தால், கோயில்களைக் கண்டபடி எல்லா இடங்களிலும் கட்டுவதில்லை. பழைய கோயில்கள் தோன்றிய இடங்களுக்கு தல வரலாறு என்று வரலாறுகள் இருக்கும். சில இடங்களில் சிவலிங்கம் தாமாகத் தோன்றியிருக்கும். இதைச் சுயம்பு என்று (தானாகத் தோன்றியது) சொல்வார்கள். வேறு சில இடங்களில் முனிவர்கள், சித்தர்கள், ரிஜீகள் இருந்து பலவருடங்கள் தவம் செய்திருப்பார்கள். இப்படி ஏதோ ஒரு விதத்தில் ஒரு வரலாறு இருக்கும். ஒரு சிறப்பு இருக்கும் அல்லது ஒரு சக்தி இருக்கும். அப்படியான இடங்களிலேயே கோயில்கள் அமைந்தன. அப்படியான கோயில்களிலேதான் தெய்வாம்சம் இருக்கும்.

இந்த நாட்டிலே அப்படி இடங்கள் எதுவும் இல்லை. சில கோயில்கள் பழைய கிறித்துவ ஆலயங்கள், இடுகாடுகள் அமைந்த இடங்களில் தோன்றியுள்ளன. சில கோயில்கள் கடைகளுக்கு நடுவே தோன்றியுள்ளன. சில கோயில்கள் கிட்டங்கி எனப்படும் பொருள்கள் சேகரித்து வைக்கும் இடங்களில் தோன்றியுள்ளன. பழைய காலத்தில் மன்னர்கள் கோயில் அமைக்கு முன்னர், அரசவையில் இருக்கும் பெரியவர்களை, அறிஞர்களை ஆலோசனை கேட்டே அமைத்தார்கள். கோயில் அமைக்கவென்றே இடத்தைத் தேடினார்கள். பொருத்தமான அளவான இடம் கிடைத்தால் மட்டுமே கோயில் நிறுவினார்கள். தான்தோன்றி மூர்த்தங்களைச் சுற்றிக்

கோயில்கள் அமைக்கும்போதும் இடத்தை அவர்கள் கட்டுப்படுத்தவில்லை. ஆனால் இந்த ஊரில் இடத்தை எடுத்துவிட்டு அதற்கு ஏற்றாற்போலக் கோயிலைக் கட்டுகிறார்கள். அல்லது, ஓரிடத்தில் அமைத்துவிட்டுச் சில நாள்களின்பின் இன்னோரிடத்துக்கு மாற்றுகிறார்கள். கோயில் அளவுகளை மாற்றுகிறார்கள். சந்நிதியின் அளவுக்கு ஏற்றமாதிரி மூர்த்தங்களைச் செய்வதில்லை. மூர்த்தங்களை முதலிலே செய்துவிட்டு இடம் கிடையாமையால் சிறிய கோயிலை அமைத்து அங்கே பிரதிட்டை செய்கிறார்கள். பரிமாணங்களுக்கு ஏற்றதாகக் கோயில்கள் அமைகிறதா இல்லையா என்று சிறிதளவும் சிந்திப்பதில்லை.

இன்னொரு முக்கியமான விடயத்தையும் இங்கே கூறவேண்டும். பழைய புராண வரலாறுகளை எடுத்துக்கொண்டால், கடவுளைத் தரிசிக்க, யாகம் செய்ய, கோயில்கள் அமைக்க, தவம் செய்ய முனிவர்களும் ஞானிகளும் தேவர்களும் தெரிவுசெய்கின்ற இடம் பாரதபூமியாகும். வேறு எங்கு செய்தாலும் பலன் அவ்வளவாகக் கிடைக்காது என்றொரு காரணம் கூறப்படுகிறது. வெளிநாடுகளில் உள்ளவர்கள் முறையான வழிபாடு செய்து பலன்பெற விரும்பினால் அங்கேதான் போகவேண்டும். அப்படியானால் வேறு நாடுகளில் வழிபட இயலாதா என்ற கேள்வி எழுகிறது. ஓரளவாவது முறைகளைப் பின்பற்றி வழிபாடுகள் செய்தால் ஓரளவு பயன் கிடைக்க வாய்ப்பு உண்டு என்று கொள்ளலாம். முறைகளைப் பின்பற்றுவதென்றால் என்ன செய்யவேண்டும்?

கோயில்களிலே ஆறுகாலப் பூசைகள் நடைபெறவேண்டும். அது இயலாதபோது மூன்று காலப் பூசைகளாவது நடக்கவேண்டும். ஆகக் குறைந்தது நாளுக்கு இரண்டு முறையாவது பூசை வழிபாடுகள் நடக்கவேண்டும். கோயில்களிலே வழிபாடுகளின் ஓர் அங்கமாக, தேவார, திருவாசக திருமுறைகள் ஓதப்படவேண்டும். இங்குள்ள பல கோயில்களில் தகுதிவாய்ந்த (லூயிலீம் சிவன்கோயிலைத் தவிர) ஓதுவார்கள் இல்லை. இங்குள்ள கோயில் தருமகர்த்தாக்கள் இந்த விடயத்தில் அவ்வளவாக அக்கறை காட்டுவதாகவும் தெரியவில்லை. தேவாரத்தை யாரும் பாடலாம், எப்படியும் பாடலாம் என அவர்கள் நினைக்கிறார்கள். மந்திரங்கள் ஓதுவதற்கு ஒரு முறை இருப்பதழிபுலீல தேவாரம் ஓதுவதற்கும் முறை இருக்கிறது. யாரும் எப்படியும் ஓத இயலாது. இவற்றைத் தெரிந்துகொள்ளாது, தெரிய முயலாது எல்லோரையும் திருமுறை ஓத விடுகிறார்கள். எல்லோரும் திருமுறை ஓத விழைகிறார்கள். "ஐந்து கரத்தனை", "வாக்குண்டாம்" போன்றவற்றைத் தேவாரம் என்று நினைத்துப் பாடுகிறார்கள். தேவாரங்களைப் பிழையாகப் பாடுகிறார்கள். இல்லையேல் பஜனை என்ற பெயரில் என்னென்னவோ பாடுகிறார்கள். இந்தப் பிழைகளும் தவிர்க்கப்படவேண்டியவை. கோயில் வழிபாட்டு முறைகளை அறிந்தவர்களை அழைத்துவந்து இங்குள்ள கோயில்களில் திருவிழாக் காலங்களில் அல்லது வாரந்தோறும் வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் சொற்பொழிவு ஆற்றவைக்கலாம்.

இந்த நாட்டிலுள்ள கோயில் தருமகர்த்தாக்கள் சமய அறிவைக் கொஞ்சமாவது தேடவேண்டும். அடுத்த தலைமுறை அதை அறிய வாய்ப்புக்களை உருவாக்கவேண்டும். தேவாரத் திருமுறைகளை கற்கவேண்டும். கற்றவர்களிடம் கேட்டு அறியவேண்டும். அப்படி எதுவும் நடக்காவிட்டால் இன்னும் சில ஆண்டுகளில் இங்குள்ள கோயில்கள் அருங்காட்சியகங்களாக மாறிவிடும். அல்லது வேற்றுமத வழிபாட்டு இடங்களாக மாறும். பின்னர் வருந்துவதிற் பயனில்லை.

# என் அன்பு இனியவர்களே...

லண்டனில் தமிழர் தகவல் கடந்த பதினாறு ஆண்டுகளாக பல்வகை இன்னல்கள்தாண்டி வெளிக்கொண்டுவரப்பட்டதை அறிவீர்கள். சொல்லவேண்டிய உண்மைகள் வெளிப்படுத்தப்பட்ட காலங்களில் மனக் கசப்புகளும் வராமலில்லை. எனினும் என்னிடம் எவர்மேலும் எந்தச் காழ்ப்புணர்வுகளும் இல்லை. அவை சந்தர்ப்ப வெளிப்பாடுகளாகவே இருந்தன. நான் உண்மையானவர் அதனால் தற்போது பொருளாதாரத்தில் நலிந்துள்ளேன். உங்களிடம் உதவி கேட்கின்றேன்.

இதழைத் தொடர்ந்து நடத்த நிதிதேவை. ஆர்வமுள்ள அன்பர்களிடமிருந்து அன்பளிப்புகளை எதிர்பார்க்கிறேன். ஒரு நிரந்தவைப்பினூடாகப் பெறும் வருமானத்திலிருந்து இந்த இதழைப் தொடர்ந்து வெளியிட எண்ணுகிறேன்.

தங்கள் ஆதரவின் பலம்தான் இதன் எதிர்காலம்.

கணக்கு எண் : 29513668

வங்கி இலக்கம் : 77 91 29

வங்கி : Lloyds TSB

# ஆண்டு 2018 ராசி பலன்







நிறை குறைகளை அலசி ஆராய்ந்து யாரையும் துல்லியமாக கணிக்கும் நீங்கள் மற்றவர்களின் உணர்வுக்கு மதிப்புக் கொடுப்பவர்கள். உங்களுடைய ராசிக்கு சந்திரன் 2ம் இடத்தில் நிற்கும் நேரத்தில் இந்த 2018ம் ஆண்டு பிறப்பதால் வர வேண்டிய பணமெல்லாம் கைக்கு வரும். கைமாற்றாகவும், கடனாகவும் வாங்கி

யிருந்த பணத்தையும் ஒருவழியாக தந்து முடிப்பீர்கள். வருடப் பிறப்பின்போது ராசிநாதன் செவ்வாய் 7ம் வீட்டில் நிற்பதால் கணவன் மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். புத்தாண்டின் தொடக்கம் முதல் 02.10.2018 வரை உங்களின் பாக்யாதிபதியும் விரயாதிபதியுமான குருபகவான் 7ம் வீட்டில் அமர்ந்து உங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதால் அழகு, ஆரோக்கியம் கூடும். உங்களுடைய திறமைக்கு பரிசு, பாராட்டுகள் கிட்டும்.

விலை உயர்ந்த தங்க நகை, ரத்தினங்கள் வாங்குவீர்கள். 14.02.2018 முதல் 10.04.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ம் பாதத்தில் அதிசார வக்ரத்திலும் மற்றும் 3.10.2018 முதல் வருடம் முடியும் வரை குரு உங்களுடைய ராசிக்கு 8ம் வீட்டில் சென்று மறைவதால் சின்னச் சின்ன விஷயங்களையும் சற்று போராடி முடிக்க வேண்டி வரும். புத்தாண்டின் தொடக்கத்தில் சூரியன் பகைக் கோளான சனியுடன் இணைந்து நிற்பதால் பிள்ளைகளின் உயர்கல்வி, உத்யோகம், திருமணம் சம்பந்தப்பட்ட கவலைகள் வந்து போகும். உங்களின் ஜீவனாதிபதியும்லாபாதிபதியுமான சனிபகவான் இந்தாண்டு முழுக்க உங்களுடைய ராசிக்கு 9ம் இடத்திலேயே தொடர்வதால் எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பெரிய பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும்தந்தையாருடன் மோதல்கள் வரும்.

அவருக்கு நெஞ்சு எரிச்சல், ரத்த அழுத்தம், வயிற்று உபாதைகளெல்லாம் வந்து போகும். பிதுர்வழி சொத்தைப் பெறுவதில் சின்னச் சின்ன தடைகள் வந்து போகும். அநாவசியச் செலவுகளை கட்டுப்படுத்தப் பாருங்கள். 01.01.2018 முதல் 13.01.2018 வரை சூரியனும், சனியும் சேர்ந்திருப்பதால் தந்தையாரின் உடல்நிலை பாதிக்கும். சிறு சிறு விபத்துகள் நிகழக்கூடும். பல வேலைகளை நீங்களே பார்க்க வேண்டி வரும். அரசு விவகாரங்களில் கவனம் தேவை. 10.3.2018 முதல் 02.05.2018 வரை உள்ள காலக்கட்டங்களில் சனியும், செவ்வாயும் சேர்ந்திருப்பதால் தந்தை வழி உறவினர்களுடன் கருத்து மோதல்கள் வர வாய்ப்பிருக்கிறது. மன உளைச்சல், டென்ஷன் அதிகரிக்கும். யாரையும் நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். 03.5.2018 முதல் 30.10.2018 வரை கேதுவுடன் செவ்வாய்

சேர்ந்திருப்பதால் இக்காலக்கட்டத்தில் உத்யோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். மறைமுக அவமானங்களும் வந்து போகும். ஆனால், பதவி உயரும்.

உங்களை பற்றிய விமர்சனங்கள் அதிகரிக்கும். 02.08.2018 முதல் 29.8.2018 வரை உள்ள காலக்கட்டத்திலே சுக்கிரன் 6வது வீட்டிலே சென்று மறைவதனால் கணவன் மனைவிக்குள் கருத்து மோதல், வாகன விபத்து, தங்க ஆபரணங்கள் தொலைந்து போகுதல் போன்ற நிகழ்வுகள் நிகழக்கூடும். கவனமாக இருப்பது நல்லது. இந்த 2018ம் ஆண்டு முழுக்கவே நிழல் கிரகங்களான ராகு 4ம் இடத்திலும், கேது 10லும் தொடர்வதால் உங்களைப் பற்றிய விமர்சனங்கள் அதிகமாகும். சிலர் வீடு மாற வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும் அல்லது வேறு ஊர், மாநிலம் மாற வேண்டிய சூழலும் ஏற்படும். இடப்பெயர்ச்சி உண்டு. தாயார் கோபத்தில் ஏதேனும் திட்டினாலும் அதையெல்லாம் உடனே மறந்து விடுவது நல்லது. அவருக்கு நீரிழிவு நோய், மூட்டு வலி, நரம்புச் சுளுக்கு வந்து போகும். புறநகர் பகுதியில் வீடோ, மனையோ வாங்கி வைத்திருப்பவர்கள் அவ்வப்போது சென்று கண்காணித்து வருவது நல்லது. மற்றவர்கள் அதை உரிமைக் கொண்டாட வாய்ப்பிருக்கிறது. பழைய கடனை நினைத்து கவலைப்படுவீர்கள். சேர்த்து வைத்த கௌரவத்திற்கு பங்கம் வந்துவிடுமோ என்ற அச்சம் இருந்து கொண்டேயிருக்கும்.

வியாபாரிகளே! கடந்தாண்டில் ஏற்பட்ட நட்டங்களையெல்லாம் சரி செய்வீர்கள். மக்களின் ரசனையைப் புரிந்து கொண்டு புது வியூகம் அமைத்து லாபம் ஈட்டுவீர்கள். முக்கிய சாலைக்கு கடையை மாற்ற திட்டமிடுவீர்கள். சிலர் சொந்த இடம் வாங்கி கடையை மாற்றுவீர்கள். சந்தையில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரிகள் சங்கத்தில் முக்கிய பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். வேலையாட்களின் குறை, நிறைகளை சுட்டிக் காட்டி திருத்துவீர்கள். மாற்றுமொழிப் பேசுபவர்களும், பிரபலங்களும் வாடிக்கையாளர்களாக அறிமுகமாவார்கள். உணவகம், தங்கும் விடுதி, கண்சல்டன்சி, சிமெண்ட் வகைகளால் ஆதாயமடைவீர்கள். புகழ் பெற்ற வெளிநாட்டு நிறுவனங்களுடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். ராகு 4ல் நிற்பதால் கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. பங்குதாரர்கள் தங்களது பங்கை கேட்டு தொந்தரவு தருவார்கள்.

உத்யோகஸ்தர்களே! உத்யோக ஸ்தானாதிபதி சனி சாதகமாக இருப்பதால் அலுவலகத்தில் பாராட்டப்படுவீர்கள். எதிராக செயல்பட்ட அதிகாரி வேறு இடத்திற்கு மாறுவார். புது அதிகாரியால் மதிக்கப்படுவீர்கள். என்றாலும் கேது 10ல் தொடர்வதால் ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வேலைகளை சேர்த்துப் பார்க்க வேண்டி வரும். அடிக்கடி விடுப்பில் செல்லாதீர்கள். உங்களுடைய உழைப்பை பயன்படுத்தி வேறு சிலர் முன்னேறுவார்கள். சக ஊழியர்களில் ஒருசாரார் உங்களுக்கு ஆதரவாகவும், மற்றொரு சாரார் எதிராகவும் செயல்படுவார்கள்.

கன்னிப் பெண்களே! உயர்கல்வி மற்றும் காதல் விஷயத்தில் இருந்து வந்த குழப்பங்களிலிருந்து மீள்வீர்கள். இனி தெளிவான முடிவுகளெல்லாம் எடுப்பீர்கள். வேற்றுமதத்தை சார்ந்தவர்கள் நண்பர்களாக அறிமுகமாவார்கள். உங்கள் தகுதிக் கேற்ப அதிக சம்பளத்துடன் நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். கல்யாணப் பேச்சு வார்த்தையும் சுமூகமாக முடியும். திருமணம் ஏற்பாடாகும். ஆரோக்கியமும் சீராகும்.

மாணவமாணவிகளே! வகுப்பாசிரியரிடம் நல்ல பெயர் வாங்குவீர்கள். படிப்பில் மட்டுமல்லாமல் கலைப் போட்டிகளிலும் கலந்து கொண்டு பரிசு, பாராட்டுப் பெறுவீர்கள். சிலருக்கு விளையாட்டில் பதக்கம் கிடைக்கும். உயர்கல்வியில் அதிக மதிப்பெண் பெற்று விரும்பிய பாடப்பிரிவில் சேருவீர்கள்.

அரசியல்வாதிகளே! உங்களுக்கு எதிராக செயல்பட்டவர்கள் வலுவிழப்பார்கள். மாவட்ட அளவில் முக்கிய பதவி, பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். மக்களின் அன்பிற்கு பாத்திரமாவீர்கள்.

கலைத்துறையினரே! உங்களின் நீண்ட நாள் கனவு நனவாகும். பெரிய நிறுவனத்திலிருந்து புதிய வாய்ப்புகள் வரும். புகழ், கௌரவம் ஒருபடி உயரும்.

விவசாயிகளே! விளைச்சல் இரட்டிப்பாகும். அரசாங்க சலுகைகளை சரியாகப் பயன்படுத்திக் கொள்வீர்கள். காய்கறி, தானிய வகைகளால் லாபமடைவீர்கள். சிலர் புதிதாக நிலம் கிரயம் செய்வீர்கள். இந்த 2018ம் ஆண்டு எவ்வளவோ முயன்றும் முன்னுக்கு வராமல் முடங்கிக் கொண்டிருந்த உங்களை வெற்றி பெற வைப்பதுடன், எதிர்காலத் திட்டங்களையும் நிறைவேற்றுவதாக அமையும்.




பொன், பொருள் கொடுத்துப் பொய் சொல்லச் சொன்னாலும் புறங்கூறாத நீங்கள் நீதிக்கும், நியாயத்திற்கும் கட்டுப்பட்டவர்கள். உங்களின் சப்தமாதிபதி செவ்வாய் பகவான் 6ம் வீட்டில் வலுவாக நிற்கும் போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் எல்லாப் பிரச்னைகளையும், நெருக்கடிகளையும் சமாளிக்கும் சக்தி உண்டாகும். புதன் உங்களுடைய ராசியைப் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் உங்களுடைய திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். உங்களுடைய ராசியிலேயே இந்தப் புத்தாண்டு பிறப்பதால் வேலைச்சுமை அதிகமாகும். ஓய்வெடுக்க முடியாத நிலை உருவாகும். இந்தாண்டு முழுக்க ராகு 3ம் வீட்டிலேயே முகாமிட்டிருப்பதால் தைரியம் கூடும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். இந்தப் புத்தாண்டின் தொடக்கமே ராசிநாதன் சுக்கிரன் 8ல் நிற்பதுடன் சூரியன், சனியுடன் சேர்ந்திருப்பதால் வீண் அலைச்சல்கள், திடீர் பயணங்களெல்லாம் அதிகரிக்கும்.

01.01.2018 முதல் 13.01.2018 வரை சூரியனுடன் சனி சேர்வதால் இக்காலக்கட்டத்தில் தோல்வி மனப்பான்மை, வீண்பழி வந்து போகும். யாருக்காகவும் சாட்சி, கேரண்டர் கையெழுத்திட வேண்டாம். யாரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம். சிலர் உங்களை தவறான போக்கிற்கு தூண்டுவார்கள். வங்கிக் கணக்கில் போதிய பணம் இருக்கிறதா என்று பார்த்துவிட்டு காசோலை தரவும். வழக்குகளில் அலட்சியம் வேண்டாம். 10.3.2018 முதல் 02.05.2018 வரை செவ்வாயுடன் சனி சேர்ந்திருப்பதால் இக்காலக்கட்டத்தில் பணம் கொடுக்கல், வாங்கல் விஷயத்தில் ஏமாற்றங்கள் வந்து போகும். கணவன் மனைவிக்குள் பிரிவு வந்து நீங்கும். வாகனத்தை கவனமாக இயக்குங்கள். விபத்துகள் நிகழக்கூடும். 03.05.2018 முதல் 30.10.2018 வரை செவ்வாயுடன் கேது சேர்ந்திருப்பதால் இக்காலக்கட்டத்தில் பிதுர்வழி சொத்தில் சிக்கல்கள் வரலாம். தந்தையாருடன் கருத்து மோதல்கள் வந்து போகும். செலவுகள் அதிகரிக்கும்.

30.8.2018 முதல் 28.12.2018 வரைக்கும் உங்கள் ராசிநாதன் சுக்கிரன் 6வது வீட்டில் சென்று மறைவதனால் சிறு சிறு விபத்துகள், வாகனம் பழுதாகுதல், வீடு பராமரிப்பு செலவுகள், தொண்டைப் புகைச்சல் மற்றும் காய்ச்சல் சளி தொந்தரவு வந்து நீங்கும். இந்த 2018ம் ஆண்டு முழுக்கவே சனி 8ல் அமர்ந்து அஷ்டமத்துச் சனியாகத் தொடர்வதால் பொய்யான விளம்பரத்தை கண்டு ஏமாறாதீர்கள். ரிசர்வு வங்கியின் அனுமதிப் பெறாத ஃபைனான்ஸ் கம்பெனிகளில் முதலீடு செய்ய வேண்டாம். வட்டிக்கு ஆசைப்பட்டு இருப்பதை இழந்துவிடாதீர்கள். புத்தாண்டின் தொடக்கம் முதல் 02.10.2018 வரை உங்களின் அஷ்டமலாபாதிபதியான குரு 6ம் வீட்டில் மறைந்து சகட குருவாக அமர்ந்திருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும். இதை முதலில் முடிப்பதா, அதை முடிப்பதா என்ற டென்ஷன் இருந்து கொண்டேயிருக்கும்.

ஹார்மோன் பிரச்னை, தைராய்டு, யூரினரி இன்ஃபெக்ஷன், தோலில் நமைச்சல் வந்து போகும். ஆனால் 14.02.2018 முதல் 10.04.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ம் பாதத்தில் அதிசார வக்ரத்திலும் மற்றும் 3.10.2018 முதல் வருடம் முடியும் வரை குரு உங்களுடைய ராசிக்கு 7ம் வீட்டிலும் அமர்ந்து ராசியைப் பார்க்கயிருப்பதால் உங்களுடைய திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

வியாபாரிகளே! ஆழம் தெரியாமல் காலைவிடாதீர்கள். புது முதலீடுகளை தவிர்க்கவும். வேலையாட்களால் நிம்மதி குறையும். அதிக வேலையிருக்கும் நாட்களில் பணியாட்கள் விடுப்பில் செல்வார்கள். பல நேரங்களில் நீங்களே முதலாளி, நீங்களே தொழிலாளி என்ற வகையில் வேலைப் பார்க்க வேண்டி வரும். யாருக்கும் கடன் தர வேண்டாம். அனுபவமில்லாத தொழிலில் பணத்தை கொட்டி நட்டப்படாதீர்கள். பழைய வாடிக்கையாளர்களை தக்க வைத்துக் கொள்ளுங்கள். புரோக்கரேஜ், மூலிகை, பெட்ரோகெமிக்கல், பிளாஸ்டிக் வகைகளால் லாபமடைவீர்கள். பங்குதாரர்களால் பிரச்னைகள் வெடிக்கும். எதிர்பார்த்த ஆடர் தாமதமாக வரும்.

உத்யோகஸ்தர்களே! உத்யோக ஸ்தானாதிபதியான சனி 8ல் சென்று மறைந்திருப்பதால் நிலையற்ற போக்கு நிலவும். உங்களை விட வயதில், அனுபவத்தில் குறைவானவர்களிடமெல்லாம் நீங்கள் விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய சூழ்நிலை உருவாகும். அவசரப்பட்டு வேலையை விடுவதோ, புது வேலையில் சேர்வதிலோ கவனம் தேவை. சக ஊழியர்களைப் பற்றிய குறைப்பாடுகளை மூத்த அதிகாரிகளிடம் எடுத்துச் செல்ல வேண்டாம். அதிகாரிகளுக்குள் நடக்கும் மோதல்களையும், ஈகோ பிரச்னைகளையும் வெளியாட்களிடம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். சிலர் உங்கள் மீது அவதூறு வழக்குத் தொடர வாய்ப்பிருக்கிறது.

விழுவதெல்லாம் எழுவதற்கே என்று நம்பிக்கையுடன் போராடி முதலிடத்தைப் பிடிப்பவர்களே! பிறரை மகிழ்வித்து மகிழ்பவர்களே! மனித நேயம் உள்ளவர்களே! பேதம் பார்க்காமல் எல்லோரிடமும் சமமாக பழகும் நீங்கள், ஆடம்பர வாழ்க்கைக்கு ஆசைப்பட மாட்டீர்கள். சுக்கிரன் உங்களுடைய ராசியைப் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்த 2018ம் வருடம் பிறப்பதால் உங்களுடைய திறமைகள் வெளிப்படும். இந்தப் புத்தாண்டு உங்களுடைய ராசிக்கு 12ம் வீட்டில் பிறப்பதால் அலைச்சலுடன் ஆதாயம் உண்டாகும். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். புத்தாண்டின் தொடக்கம் முதல் 02.10.2018 வரை உங்களின் சப்தமஜுவனாதிபதியுமான குருபகவான் 5ம் வீட்டில் அமர்ந்திருப்பதால் மாறுபட்ட சிந்தனையால் செயற்கரிய காரியங்களையும் செய்து முடிப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு.

ஆனால் 14.02.2018 முதல் 10.04.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ம் பாதத்தில் அதிசார வக்ரத்திலும் மற்றும் 3.10.2018 முதல் வருடம் முடியும் வரை குரு உங்களுடைய ராசிக்கு 6ம் வீட்டில் சென்று மறைந்து சகட குருவாக அமர்வதால் இனந்தெரியாத கவலைகள் வந்து போகும். உங்கள் குடும்பத்தினரைப் பற்றி மற்றவர்கள் சொல்வதையெல்லாம் கேட்டு குடும்பத்தினரை சந்தேகப்பட வேண்டாம். கணவன்மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போங்கள். வங்கிக் கணக்கில் போதிய பணம் இருக்கிறதா என பார்த்துவிட்டு காசோலை தருவது நல்லது. வருடம் பிறக்கும் போது ராசிநாதன் புதன் 6ம் இடத்தில் மறைந்திருப்பதால் நரம்புச் சுளுக்கு, கழுத்து வலி, காய்ச்சல், சளித் தொந்தரவு வந்து போகும். உறவினர், நண்பர்களில் சிலர் உங்கள் நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் பண உதவிக் கேட்டு தொந்தரவு தருவார்கள். செவ்வாய் 5ல் நிற்பதால் பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள்.

சொத்து வாங்குவது, விற்பதில் வில்லங்கம் வந்து விலகும். இந்த 2018ம் ஆண்டு முழுக்கவே சனி உங்களுடைய ராசிக்கு 7ல் அமர்ந்து கண்டகச் சனியாக நீடிப்பதால் தன்னம்பிக்கை குறையும். ஈகோ பிரச்னையால் கணவன்மனைவிக்குள் மோதல்கள் வரக்கூடும். ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசுவது நல்லது. மனைவி அடிக்கடி கோபப்படுவார். சில நேரங்களில் உங்களின் குற்றம், குறைகளை பட்டியலிட்டுக் கொண்டிருப்பார் அதையெல்லாம் பெரிதுப்படுத்திக்




கொள்ளாதீர்கள். மனைவிக்கு ஃபைப்ராய்டு, மஞ்சள் காமாலை, முதுகுத் தண்டில் வலி வந்து போகும். அடுத்தடுத்து தோல்விகளையும், ஏமாற்றங்களையும் சந்திப்பதாக நீங்கள் நினைத்துக் கொள்வீர்கள். சிலர் உங்களை பார்த்தால் புகழ்ந்து பேசுவதும், நீங்கள் இல்லாத போது உங்களை விமர்சிக்கவும் செய்வார்கள். மற்றவர்களைக் குறைக் கூறிக் கொண்டிருக்காமல் உங்களை நீங்களே பரிசோதித்துப் பார்த்து சரிப்படுத்திக் கொள்வது நல்லது. உங்கள் குடும்ப விஷயத்தில் மற்றவர்கள் தலையிட அனுமதிக்காதீர்கள்.

01.01.2018 முதல் 13.01.2018 வரை சூரியன் சனியுடன் சேர்ந்திருப்பதால் அக்காலக்கட்டத்தில் கர்ப்பிணிப் பெண்கள் கவனமாக இருக்க வேண்டும். இளைய சகோதரம் வகையில் அலைச்சல்கள் அதிகரிக்கும். 10.03.2018 முதல் 02.05.2018 வரை செவ்வாயுடன் சனி சேர்ந்திருப்பதால் இக்காலக்கட்டத்தில் மனைவிக்கு தலைச்சுற்றல், மூட்டு வலி, முன்கோபம் வேலைச்சுமை வந்து போகும். சொத்து வாங்குவது, விற்பதில் அலட்சியம் வேண்டாம். 03.05.2018 முதல் 30.10.2018 வரை செவ்வாயுடன் கேது சேர்ந்திருப்பதால் இக்காலக்கட்டத்தில் இடைத்தரகர்களை நம்பி பணம் கொடுத்து ஏமாற வேண்டாம். கணவன்மனைவிக்குள் வீண் சந்தேகம், ஈகோ பிரச்சனை வந்து போகும். இரவில் தொலைதூர பயணங்களை தவிர்ப்பது நல்லது. 2ல் ராகுவும், 8ல் கேதுவும் இந்தாண்டு முழுக்க நீடிப்பதால் உங்களைச் சுற்றியிருப்பவர்களில் யார் உண்மையானவர்கள், யார் போலியானவர்கள் என்பதை கண்டுபிடிப்பதில் ஒரு தடுமாற்றம் இருக்கும்.

திடீர் திடீரென்று ஒருவித மனோபயம் வந்து போகும். வாழ்க்கையில் வெற்றி பெற முடியுமோ, முடியாதோ என்றெல்லாம் சில நேரங்களில் சங்கடப்படுவீர்கள். சிலர் உங்கள் வாயை கிளறி வம்புக்கிழுப்பார்கள். பேசும் போது கவனமாக இருங்கள். யாரையும் தாக்கிப் பேச வேண்டாம். பார்வைக் கோளாறு வரக்கூடும். சிலர் மூக்குக் கண்ணாடி அணிய வாய்ப்பிருக்கிறது. சோப்பு, ஷாம்பூ மாற்றாதீர்கள். அலர்ஜி வரக்கூடும். அக்கம் பக்கம் வீட்டாருடன் அனுசரணையாக நடந்து கொள்ளுங்கள். உங்களை விட வயதில் குறைந்தவர்கள் மூலமாக ஆதாயமடைவீர்கள். இடமாற்றம் உண்டு. வாகனத்தை எடுக்கும் முன் எரிப்பொருள், ப்ரேக் ஒயர் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்து விட்டு செல்வது நல்லது. சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும். காலில் அடிப்பட வாய்ப்பிருக்கிறது.




ஆறாவது அறிவுக்கு அடிக்கடி வேலை தரும் நீங்கள், சத்தியத்திற்கும், தர்மத்திற்கும் கட்டுப்பட்டவர்கள். உங்களுடைய ராசிக்கு லாப வீட்டில் சந்திரன் நிற்கும் போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் அதிகரிக்கும். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். சவாலான காரியங்களைக் கூட எளிதாக முடித்துக் காட்டுவீர்கள். இந்தாண்டு பிறக்கும் போது சூரியன் 6ம் இடத்திலும், புதன் 5ம் வீட்டிலும் அமர்ந்திருப்பதால் அரசு காரியங்கள் சுலபமாக முடியும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். இந்த 2018ம் வருடம் முழுக்கவே சனிபகவான் உங்களுடைய ராசிக்கு 6ம் இடத்தில் வலுவாக அமர்ந்திருப்பதால் எதிலும் வெற்றிப் பெறுவீர்கள். எங்குச் சென்றாலும் மதிப்பு, மரியாதைக் கூடும். திடீர் பணவரவு, யோகமும் உண்டாகும். புத்தாண்டின் தொடக்கம் முதல் 02.10.2018 வரை உங்களின் சஷ்டமபாக்யாதிபதியான குருபகவான் 4ம் வீட்டில் அமர்ந்திருப்பதால் எதையும் திட்டமிட்டு செய்வது நல்லது.

தாயார் மற்றும் தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். தாயாருக்கு அசதி, சோர்வு, ரத்த அழுத்தம் வந்துச் செல்லும். வீடு பராமரிப்புச் செலவுகளும் அதிகமாகும். வீடு வாங்கும் முன் வழக்கறிஞர்களிடம் கலந்தாலோசித்து க்ளீயரன்ஸ் சர்ட்டிபிகேட் வாங்கியப் பின் வீடு வாங்குவது நல்லது. இல்லையென்றால் வில்லங்கமான வீடுடோ அல்லது இடமோ வாங்கிவிட்டு பிரச்னைகள் வர வாய்ப்பிருக்கிறது. பொதுவாக எந்த சொத்து வாங்கினாலும் மனைவி பெயரில் வாங்குவது நல்லது. ஆனால் 14.02.2018 முதல் 10.04.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ம் பாதத்தில் அதிசார வக்ரத்திலும் மற்றும் 3.10.2018 முதல் வருடம் முடியும் வரை குரு உங்கள் ராசிக்கு 5ம் வீட்டிற்குள் நுழைவதால் புதிய எண்ணங்கள் செயல் வடிவம் பெறும். தாயாருக்கு இருந்த நோய் வெகுவாக குறையும். அவருடனான மோதல்களும் விலகும். குடும்ப வருமானத்தை உயர்த்துவீர்கள்.

ஐ.வி.எப் போல அதிக செலவுள்ள சிகிச்சைக்குப் பின்பும் அம்மா என்று சொல்ல பிள்ளையில்லை என்று நீங்கள் அழாத நாளில்லை இனி அழகிய வாரிசு உருவாகும். வயசு ஏறிக் கொண்டே போகிறதே! ஒரு வரன் கூட அமையவில்லையே என்று வளர்ந்து நிற்கும் உங்கள் பெண்ணை பார்த்து நீங்கள் வருத்தப்படாத நாளே இல்லை. நீங்கள் எதிர்பார்த்தபடி நல்ல வரன் அமையும். ஊரே மெச்சும் படி திருமணத்தை முடிப்பீர்கள். மகனின் உயர்கல்வி, உத்யோகம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் நல்ல விதத்தில் முடியும். அவருக்கிருந்து வந்த கூடாப்பழக்க வழக்கங்கள் விலகும். பூர்வீக சொத்துப் பிரச்னை முடிவுக்கு வரும். வீண்பழியிலிருந்து விடுபடுவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களுடனான மனக்கசப்பு நீங்கும். 01.01.2018 முதல் 13.01.2018 வரை சூரியனும், சனியும் 6ல் அமர்ந்திருப்பதால் பிள்ளைகளால் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கும். இழுபறியாக இருந்த வழக்கில் நல்ல தீர்ப்பு கிடைக்கும். சொந்த ஊரில் மதிப்பு, மரியாதைக் கூடும். பணபலம் கூடும்.

10.03.2018 முதல் 02.05.2018 வரை உள்ள காலகட்டங்களில் செவ்வாயுடன் சனி சேர்வதால் மறைமுக எதிரிகளை இனங் கண்டறிந்து ஒதுக்குவீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டாகும். 03.05.2018 முதல் 30.10.2018 வரை செவ்வாயுடன் கேது சேர்வதால் மனைவிக்கு மருத்துவச் செலவுகள் வந்துபோகும். முன்கோபம் அதிகரிக்கும். பிள்ளைகளால் அலைச்சல்கள் வந்து போகும். 01.01.2018 முதல் 13.1.2018 வரை சுக்கிரன் 6ல் மறைவதால் குடும்பத்தில் அவ்வப்போது சலசலப்பு இருக்கும். வீண் சந்தேகம் வேண்டாம். மனைவிவழி உறவினருடன் மனக்கசப்பு வரும். வாகன விபத்து வரக்கூடும். இந்த வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்குள்ளேயே ராகுவும், 7ம் வீட்டிலேயே கேதுவும் இருப்பதால் முன்கோபம், மனதில் ஒருவித சஞ்சலம், எதிலும் ஆர்வமில்லாத நிலை, ஹார்மோன் பிரச்னை, தலைச்சுற்றல் வந்து செல்லும். இரும்பு, நார், சுண்ணாம்பு சத்து அதிகமுள்ள காய், கனிகளை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். கணவன்மனைவிக்குள் வீண் சந்தேகம், ஈகோ பிரச்னைகள் வரக்கூடும். மனைவிக்கு மருத்துவச் செலவுகள், அவருடன் மோதல்கள் வந்து போகும். மனைவி வழி உறவினர்களுடன் உரிமையாகப் பேசி பெயரைக் கெடுத்துக் கொள்ளாதீகள். நீங்கள் யாரையும் மதிக்கவில்லை என்றெல்லாம் சிலர் குறைக் கூறுவார்கள். ஏமாற்றப்படபடுவோமோ என்று கலங்குவீர்கள். காலத்தை வீணடித்துவிட்டதாகவும் நினைப்பீர்கள். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிட்டுக் கொள்ளாதீர்கள். மற்றவர்களை சார்ந்து இருக்க வேண்டாம். முக்கிய விஷயங்களை நீங்களே நேரடியாக சென்று செய்வது நல்லது.

பொறுப்பில்லாத வேலையாட்களை மாற்றுவீர்கள். விளம்பர யுக்திகளை சரியாக கையாண்டு பழைய சரக்குகளை விற்றுத் தீர்ப்பீர்கள்.




**தா**ய் மண்ணின் மீதும், மொழியின் மீதும் தீராத தாகம் கொண்ட நீங்கள், கடல் தாண்டி போனாலும் கலாச்சாரத்தை மீற மாட்டீர்கள். வஞ்சப் புகழ்ச்சியால் சுற்றியிருப்பவர்களின் தவறுகளை சுட்டிக்காட்டும் நீங்கள், எப்போதும் நீதி நேர்மைக்கு குரல் கொடுப்பவர்கள். உங்களது 10வது ராசியில் இந்த 2018ம் வருடம் உங்களின் நிர்வாகத் திறன், ஆளுமைத் திறன் அதிகரிக்கும். இதுநாள் வரை நீங்கள் உழைத்த உழைப்பு, சிந்திய வியர்வைக்கெல்லாம் நல்ல பலன் கிடைக்கும். உங்களுடைய ராசிக்கு யோகாதிபதியான செவ்வாய் பகவான் 3ம் வீட்டில் வலுவாக அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்த 2018ம் ஆண்டு பிறப்பதால் சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகளெல்லாம் எடுப்பீர்கள். இந்தப் புத்தாண்டு பிறக்கும் போது சுக்கிரனும், புதனும் சாதகமாக இருப்பதால் உங்களது ரசனை மாறும். சாதுரியமாகப் பேசி சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள்.

இந்தப் புத்தாண்டு பிறக்கும் போது உங்களுடைய ராசிநாதன் சூரியன் பகைக்கோளான சனியுடன் இணைந்து நிற்பதால் முன்கோபம் அதிகமாகும். அரசு காரியங்கள் தாமதமாகி முடியும். பிள்ளைகளிடம் உங்களின் எண்ணங்களை திணிக்க வேண்டாம். கர்ப்பிணிப் பெண்கள் நீண்ட தூரப் பயணங்களை தவிர்ப்பது நல்லது. புத்தாண்டின் தொடக்கம் முதல் 02.10.2018 வரை உங்களின் பூர்வ புண்யாதிபதியும் அஷ்டமாதிபதியுமான குருபகவான் 3ம் வீட்டில் மறைந்து காணப்படுவதால் புதிய முயற்சிகள் தள்ளிப்போய் முடியும். ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வேலைகளைப் பார்க்க வேண்டிய சூழ்நிலையும் உருவாகும். சில நேரங்களில் எதிலும் ஒரு ஈடுபாடற்ற நிலை உண்டாகும். 14.02.2018 முதல் 10.04.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ம் பாதத்தில் அதிசார வக்ரத்திலும் மற்றும் 3.10.2018 முதல் வருடம் முடியும் வரை குரு உங்களுடைய ராசிக்கு 4ம் வீட்டில் அமர்வதால் இழுபறியாக இருந்த காரியங்களெல்லாம் முடிவடையும்.

என்றாலும் தாயாருக்கு முதுகு, மூட்டு வலி, சிறுசிறு அறுவை சிகிச்சைகள் வந்துச் செல்லும். தாயார், அம்மான், அத்தைவழியில் மனஸ்தாபம் வந்து நீங்கும். வாகனத்தில் செல்லும் போது தலைக்கவசம் அணிந்துச் செல்லுங்கள். சிறுசிறு விபத்துகள் நிகழக்கூடும். சொத்து வாங்கும் போதும் சட்ட நிபுணர்களை கலந்தாலோசித்து தாய்பத்திரம், வில்லங்க சான்றிதழ்களையெல்லாம் சரி பார்த்து வாங்குங்கள். உங்களைப் பற்றிய விமர்சனங்கள் அதிகரிக்கும். அரசிடமிருந்து முறையான கட்டிட வரைப்பட அனுமதி பெறாமல் கட்ட வேண்டாம். வருடம் முடியும் வரை சஷ்டமசப்தமாதிபதியான சனி 5ம் வீட்டிலேயே தொடர்வதால் தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் திணறுவீர்கள். எதையுமே யோசிக்க முடியாமல் ஆழ்மனதில் ஒருவிதமான குழப்பம் இருந்து கொண்டேயிருக்கும். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். குடும்ப சூழ்நிலையை அவர்களிடம் அன்பாக எடுத்துச் சொல்லிப் புரிய வையுங்கள்.

மகளின் திருமணத்திற்காக வெளியில் கடன் வாங்க வேண்டி வரும். மகனின் உயர்கல்வி, உத்யோகம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் தாமதமாக முடியும். அவரின் நட்பு வட்டத்தை கண்காணிப்பது நல்லது. கர்ப்பிணிப் பெண்களுக்கு உணவு விஷயத்தில் கட்டுப்பாடு அவசியம். பூர்வீகச் சொத்துக்கான வரியை செலுத்தி சரியாக பராமரியுங்கள். 01.01.2018 முதல் 13.01.2018 வரை சூரியனுடன், சனி சேர்ந்திருப்பதால் இக்காலக்கட்டத்தில் செலவுகள் அதகிரிக்கும். வேலைச்சுமை அதிகரித்து சோர்வடையச் செய்யும். தூக்கம் குறையும். 10.03.2018 முதல் 02.05.2018 வரை உள்ள காலக்கட்டங்களில் செவ்வாயும், சனியும் சேர்வதால் தாயாரின் உடல் நிலை பாதிக்கும். தாய்வழி உறவினர்களுடன் மனத்தாங்கல் வரும். உங்கள் மீது சிலர் வீண்பழி சுமத்துவார்கள். சாலையை கடக்கும் போதும், வாகனத்தை இயக்கும் போதும் அலைபேசியில் பேச வேண்டாம்.

03.05.2018 முதல் 30.10.2018 வரை உள்ள காலக்கட்டங்களில் செவ்வாயும், கேதுவும் சேர்வதால் வி.ஐ.பி களுக்கு நெருக்கமாவீர்கள். ஏமாற்றுக் காரர்களை இனம் கண்டு ஒதுக்குவீர்கள். அயல்நாட்டில் இருப்பவர்களால் ஆதாயம் உண்டு. 14.1.2018 முதல் 07.2.2018 வரை சுக்கிரன் 6ல் மறைவதனால் சிறுசிறு விபத்துகள் வந்துப் போகும். வாகனத்தை வேகமாக இயக்க வேண்டாம். அக்கம்பக்கம் வீட்டாருடன் கவனமாக பழகுங்கள். திடீரென்று அறிமுகமாகுபவரை வீட்டிற்கு அழைத்து வர வேண்டாம். கணவன்மனைவிக்குள் ஈகோ பிரச்னையால் மோதல்கள் வரும். இந்தாண்டு முழுக்கவே உங்கள் ராசிக்கு 6ம் வீட்டில் கேது பகவான் நிற்பதால் உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். உள் மனதில் தொக்கி நிற்கும் தாழ்வு எண்ணங்களை தூக்கி எறிவீர்கள். நகரின் எல்லையை ஒட்டியிருக்கும் பகுதியிலே நிலம், வீடு, மனை வாங்கும் யோகம் உண்டாகும்.

மனதில் பட்டத்தை பளிச்சென்று பேசி உண்மைகளை வெட்ட வெளிச்சத்திற்கு கொண்டு வரும் நீங்கள், சில சமயங்களில் பலருக்கு எதிரியாகவே தெரிவீர்கள். எல்லோரையும் எடுத்த எடுப்பிலேயே நம்பும் நீங்கள், காலம் கடந்து தான் சிலரின் கல் மனதை புரிந்து கொள்வீர்கள். உங்கள் ராசிக்கு 9ம் வீட்டில் சந்திரன் நிற்கும் நேரத்தில் இந்த 2018ம் ஆண்டு பிறப்பதால் தொலைநோக்குச் சிந்தனை அதிகரிக்கும். புத்தாண்டின் தொடக்கம் முதல் 02.10.2018 வரை உங்களின் சுகசப்தமாதிபதியான குருபகவான் 2ம் வீட்டில் நிற்பதால் இதமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். அனுபவப் பூர்வமான முடிவுகளால் எல்லோரையும் கவருவீர்கள். கணவன்மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக்கட்டும். குழந்தை பாக்யம் கிடைக்கும். தாயாரின் ஆரோக்கியம் சீராகும்.




ஆனால் 14.02.2018 முதல் 10.04.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ம் பாதத்தில் அதிசார வக்ரத்திலும் மற்றும் 3.10.2018 முதல் வருடம் முடியும் வரை குரு உங்களுடைய ராசிக்கு 3ம் வீட்டில் சென்று மறைவதால் எந்த வேலையையும் முதல் முயற்சியில் முடிக்க முடியாமல் இரண்டு, மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். வதந்திகளை நம்பாதீர்கள். உங்கள் இருவருக்குள் வீண் சந்தேகத்தை ஏற்படுத்தி பிரிவை உண்டாக்க சிலர் முயற்சி செய்வார்கள். வி.ஐ.பிகளுடன் கருத்து மோதல் வரும். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்களுடைய தனித்தன்மையை பின்பற்றுவது நல்லது. இந்தாண்டு முழுக்க உங்களுடைய ராசிக்கு 4ம் வீட்டிலேயே சனி அமர்ந்து அர்த்தாஷ்டமச் சனியாக தொடர்வதால் உங்களின் அடிப்படை நடத்தை கோலங்களை மாற்றிக் கொள்ளாதீர்கள். தாயாருக்கு அடிக்கடி உடல் நிலை பாதிக்கும். அவருடன் மனக்கசப்பு வந்து நீங்கும்.

01.01.2018 முதல் 13.01.2018 வரை சூரியனுடன், சனி சேர்ந்திருப்பதால் பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். உங்கள் பலம், பலவீனமறிந்து செயல்படப் பாருங்கள். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும் முன் சட்ட நிபுணர்களை கலந்து ஆலோசிப்பது நல்லது. 10.03.2018 முதல் 02.05.2018 வரை செவ்வாயுடன் சனி சேர்வதால் தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள், அலைச்சல்கள் ஏற்படும். வாகனம் அடிக்கடி தொந்தரவு தரும். ஒரு சொத்தை காப்பாற்ற மற்றொரு சொத்தை விற்க வேண்டி வரும். அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளை உடனுக்குடன் செலுத்தி விடுங்கள். 03.05.2018 முதல் 30.10.2018 வரை செவ்வாயுடன் கேது சேர்வதால் மன இறுக்கம் வந்து நீங்கும்.

மகனின் படிப்பு, உத்யோகத்துக்காக சிலரது சிபாரிசை நாடுவீர்கள். கார்ப்பிணிகள் அதிக எடையுள்ள பொருட்களை தூக்க வேண்டாம். படிகளில் ஏறும்போது கவனம் தேவை. 8.2.2018 முதல் 2.3.2018 வரை உள்ள காலக்கட்டத்தில் சுக்கிரன் 6ல் மறைவதனால் குடும்பத்தில் சின்ன சின்ன பிரச்னைகள் அதிகமாகும். நீங்கள் எதைப் பேசினால் அதை எல்லோரும் தவறாகப் புரிந்து கொள்வார்கள். டி.வி., ஃப்ரிட்ஜ் பழுதாகும். சிறுசிறு வாகன விபத்துகள் ஏற்படக்கூடும். அலைப் பேசியில் பேசிக் கொண்டு வாகனத்தை இயக்க வேண்டாம். இந்தப் புத்தாண்டு முழுக்கவே ராகுபகவான் லாப வீட்டிற்குள்ளேயே அமர்ந்திருப்பதால் முன்பு சவாலாக தெரிந்த சில விஷயங்கள் இப்போது சாதாரணமாக முடிவடையும். கேது 5ல் தொடர்வதால் குழப்பம் அதிகரிக்கும். சில நேரங்களில் மனஇறுக்கம் உண்டாகும்.

வியாபாரிகளே! போட்டிகளையும் தாண்டி லாபம் சம்பாதிப்பீர்கள். அர்த்தாஷ்டமச் சனி தொடர்வதால் சின்ன சின்ன நட்டங்கள் இருக்கும். தொடர்ந்து லாபம் பெற முடியவில்லையே என்ற ஒரு கவலைகளும் இருக்கும். ஒரு வாரம் நன்றாக இருந்தால் மறுவாரம் வருமானம் இல்லாமல் போகிறதே என்று நினைத்து கலங்குவீர்கள். வியாபாரத்தை நம்பி ஒரு லோன் வாங்கலாம் என்று நினைத்தால் கூட முடியாமல் போகிறதே, நிலையற்ற வருமானமாகி விட்டது என்றெல்லாம் ஆதங்கப்படுவீர்கள். உணவு, மருந்து, கட்டுமானப் பொருட்கள், நெல் மண்டி வகைகளால் லாபமடைவீர்கள். கூட்டுத் தொழிலில் பிரச்னைகள் வெடிக்கும். பங்குதாரர்கள் உங்களை கோபப்படுத்தினாலும், அவசரப்பட்டு வார்த்தைகளை விட வேண்டாம். வேலையாட்களும் உங்களுடைய கஷ்ட, நஷ்டங்களைப் புரிந்து கொள்ளாமல் பொறுப்பற்று நடந்து கொள்வார்கள். பழைய பாக்கிகளை போராடி வசூலிக்க வேண்டியது வரும். தள்ளிப்போன ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

உத்யோகஸ்தர்களே! தலைமைக்கு நெருக்கமாவீர்கள். என்றாலும் கொஞ்சம் வேலைச்சுமை, டென்ஷன் இருக்கத்தான் செய்யும். உயரதிகாரி உங்களின் கடின உழைப்புக்கு அங்கீகாரம் அளிப்பார்.




யதார்த்தமான முடிவுகளை எடுத்து மற்றவர்களை வியக்க வைக்கும் நீங்கள், கேள்வி ஞானம் அதிகமுள்ளவர்கள். எந்த நிகழ்வுகளையும் தொகுத்து கோர்வையாக வெளியிடுவதில் வல்லவர்கள். அளவுக்கு அதிகமாக செல்வம் சேர்க்க விரும்பாத நீங்கள், எதற்காகவும் சுதந்திரத்தை விட்டுக் கொடுக்க மாட்டீர்கள். 3ம் வீட்டில் உங்களின் யோகாதிபதியான சனிபகவான் வலுவடைந்து நிற்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் கூடிவரும். உங்களுடைய ராசிக்கு 3ம் சூரியனும், சுக்கிரனும் நிற்கும்போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் மனோபலம் அதிகரிக்கும். இந்த 2018ம் ஆண்டு உங்கள் ராசிக்கு 8ம் வீட்டில் பிறப்பதால் எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட போராட்டத்திற்கு பின்பு முடியும். ஒரு பக்கம் பணம் வரும் என்றாலும் செலவுகள் இருமடங்காக இருந்துக் கொண்டேயிருக்கும்.

புத்தாண்டின் தொடக்கம் முதல் 02.10.2018 வரை உங்களின் திருதியாதிபதியும் சஷ்டமாதிபதியுமான குரு உங்களுடைய ராசிக்குள்ளேயே அமர்ந்து ஜென்ம குருவாக தொடர்வதால் ஆரோக்யத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பாருங்கள். மஞ்சள் காமாலை, காய்ச்சல், காது வலி, வயிற்று உபாதைகளெல்லாம் வரக்கூடும். சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரைக் குடிப்பது நல்லது. லாகிரி வஸ்துக்களை தவிர்ப்பது நல்லது. பழைய பிரச்னையில் ஒன்று முடிந்தது என்று நிம்மதிப் பெருமூச்சுவிடும் நேரத்தில் அடுத்த சிக்கல்கள் ஒன்று புதிதாக தலைத்தூக்கும். தூக்கம் குறையும். சிலர் உங்களைப் பற்றி அவதூறாகப் பேசுவார்கள். வீண் பழியும் வந்து நீங்கும். கணவன்மனைவிக்குள் மனக்கசப்புகள் வரும். வதந்திகளை நம்பாதீர்கள். உங்கள் இருவருக்குள் வீண் சந்தேகத்தை ஏற்படுத்தி பிரிவை உண்டாக்க சிலர் முயற்சி செய்வார்கள்.

ஆனால் 14.02.2018 முதல் 10.04.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ம் பாதத்தில் அதிசார வக்ரத்திலும் மற்றும் 3.10.2018 முதல் வருடம் முடியும் வரை குரு உங்களுடைய ராசிக்கு 2ம் வீட்டில் சென்று அமர்வதால் குடும்பத்தில் நிலவி வந்த கூச்சல், குழப்பங்கள் விலகும். பிரிந்திருந்த கணவன்மனைவி ஒன்று சேர்வீர்கள். உங்களுக்குள் கலகத்தை ஏற்படுத்தியவர்களை இனங்கண்டறிந்து ஒதுக்குவீர்கள். பெரிய நோய் இருப்பதைப் போன்ற பிரம்மையிலிருந்து விடுபடுவீர்கள். மருந்து மாத்திரைகளிலிருந்து விடுதலை கிடைக்கும். தினந்தோறும் எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். வி.ஐ.பிகள் அறிமுகமாவார்கள். திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம், காது குத்து போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். அநாவசியச் செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். குழந்தை பாக்யம் கிடைக்கும். அடகிலிருந்த நகையை மீட்பீர்கள். முன்னுக்குப் பின் முரணாகப் பேசிக் கொண்டிருந்த நிலை மாறும். கண்டும் காணாமல் சென்று கொண்டிருந்தவர்களெல்லாம் உங்கள் வளர்ச்சியைக் கண்டு வலிய வந்து உறவாடுவார்கள்.

01.01.2018 முதல் 13.01.2018 வரை சூரியனும், சனியும் சேர்வதால் பணவரவு அதிகரிக்கும். கௌரவப் பதவிகள் தேடி வரும். ஷேர் மூலம் பணம் வரும். அரசால் ஆதாயமடைவீர்கள். 10.03.2018 முதல் 02.05.2018 வரை செவ்வாயுடன், சனியும் சேர்வதால் மூத்த சகோதர, சகோதரிகளால் ஆதாயமுண்டு. என்றாலும் அவ்வப்போது மனஸ்தாபங்கள் வரக்கூடும். பூர்வீகச் சொத்துக்கான வரியை செலுத்தி சரியாக பராமரியுங்கள். நீண்ட நாளாக புதுபிக்கப்படாமலிருந்த குலதெய்வ கோயிலை சொந்த செலவில் புதுப்பிப்பதுடன், உங்களின் நேர்த்திக்கடனையும் முடிப்பீர்கள். 03.05.2018 முதல் 30.10.2018 வரை செவ்வாயுடன், கேது சேர்வதால் இக்காலக்கட்டத்தில் உணர்ச்சிவசப்பட்டு பேசுவதை தவிர்க்கவும். பிள்ளைகளின் உயர்கல்வி, உத்யோகத்தின் பொருட்டு அவர்களை பிரிய நேரிடலாம்.

யாருக்காகவும் ஜாமீன் கேரன்டர் கையெழுத்திட வேண்டாம். 3.3.2018 முதல் 28.3.2018 வரை சுக்ரகின் 6ல் மறைவதால் மனைவிக்கு மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். அவருடன் கருத்து மோதல்களும் வரும். சிறுசிறு வாகன விபத்துகள் வந்து நீங்கும். மின் சாதனங்கள், மின்னணு சாதனங்களையெல்லாம் கவனக்குறைவால் தொலையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இந்தாண்டு முழுக்க ராகுபகவான் 10ம் வீட்டிலும், கேது ராசிக்கு 4ம் இடத்திலும் இருப்பதால் மனதில் இனம்புரியாத பயம், முடிவுகளெடுப்பதில் தடுமாற்றம் வந்து செல்லும். அடுத்தடுத்து வேலைச்சுமை இருக்கும். உத்யோகத்தில் இடமாற்றம் உண்டு. சிக்கலான, சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். கௌரவக் குறைவான சம்பவங்கள் நிகழும். தாயார் உரிமையில் ஏதேனும் திட்டினால் அதையெல்லாம் பெரிதுப்படுத்திக் கொண்டிருக்காதீர்கள். அவருக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படும். சில நாட்கள் தூக்கமில்லாமல் போகும். முன்பின் தெரியாதவர்கள் யாரேனும் உங்களுக்கு உதவுவதாக முன் வந்தால் உடனே நம்பி ஏமாற வேண்டாம்.




எல்லோரும் எல்லாம் பெற வேண்டும் என்ற எண்ணம் கொண்ட நீங்கள், புரட்சிகரமான தொலை நோக்குத் திட்டங்கள் தீட்டுவதில் வல்லவர்கள். தாயா தாரமா என்ற தடுமாற்றம் உங்களுக்கு அடிக்கடி வரும். சடங்கு, சம்பிரதாயங்களை விட சுய கௌரவத்திற்கு முக்கியத்துவம் தருவீர்கள். உங்கள் ராசிக்கு 7ம் வீட்டில் இந்தாண்டு பிறப்பதால் புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். பாதியிலேயே நின்ற பல வேலைகள் இனி முழுமையாக முடியும். திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிட்டும். 2018ம் ஆண்டு பிறக்கும் நேரத்தில் சுக்கிரனும், புதனும் சாதகமாக இருப்பதால் எதிர்பார்ப்புகள் தடையின்றி முடியும். உங்களுடைய ஆலோசனையை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். உறவினர், நண்பர்கள் தேடி வந்துப் பேசுவார்கள். மனைவிக்கு வேலை கிடைக்கும். அவர் வழி உறவுகளால் ஆதரவு உண்டு. சிலர் நல்ல காற்றோட்டம், குடி நீர் வசதியுள்ள வீட்டிற்கு குடிப்புகுவீர்கள்.

கல்யாணம், சீமந்தம், காது குத்தி என வீடு களைக்கட்டும். குடும்பத்தினருடன் வெளியூர் பயணம் சென்று வருவீர்கள். ஆனால் உங்கள் ராசிநாதன் செவ்வாய் ராசிக்கு 12ல் நிற்கும் போது இந்தாண்டு பிறப்பதால் சிக்கனமாக இருக்கலாம் என்று நீங்கள் எப்போது நினைத்தாலும் முடியாமல் போகும். வருடம் முடியும் சனி 2ல் அமர்ந்து ஏழரைச் சனியின் இறுதிக் கட்டமான பாதச் சனி தொடர்வதால் கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சிக்க வேண்டாம். வருடப் பிறப்பு முதல் 13.01.2018 வரை சூரியனும், சனியும் சேர்ந்திருப்பதால் உடல் உஷ்ணம், ரத்த அழுத்தம், காரியத் தடங்களெல்லாம் வந்து போகும். முன்கோபத்தால் முக்கியஸ்தர்களின் நட்பை இழந்துவிடாதீர்கள். அரசு காரியங்கள் இழுபறியாகும். 10.03.2018 முதல் 02.05.2018 வரை உங்கள் ராசிநாதன் செவ்வாய் சனியுடன் சம்பந்தப்பட்டு பலவீனமடைவதால் சிறுசிறு நெருப்புக் காயங்கள், சகோதர வகையில் சங்கடங்கள், பணப்பற்றாக்குறை, சொத்து சிக்கல்கள், பழைய கடன் பற்றிய கவலைகள் வந்து செல்லும்.

கால்சியம் சத்து குறைய வாய்ப்பிருக்கிறது. சாலைகளை கவனமாக கடந்துச் செல்லுங்கள். 03.05.2018 முதல் 30.10.2018 வரை உங்கள் ராசிநாதன் செவ்வாய் கேதுவுடன் சேர்வதால் புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். இளைய சகோதரம் வகையில் ஆதரவு பெருகும் அவ்வப்போது களைப்படைவீர்கள். 29.03.2018 முதல் 21.04.2018 வரை சுக்கிரன் 6ல் மறைவதனால் அலைச்சல், செலவினங்கள், கணவன்மனைவிக்குள் சந்தேகத்தால் சின்னச் சின்ன வாக்குவாதங்களும் வரக்கூடும். சிறுசிறு அறுவை சகிச்சைகளும் வந்து போக வாய்ப்பிருக்கிறது. இந்த 2018ம் வருடம் முழுக்க ராகு 9ம் வீட்டில் நிற்பதால் எதையும் திட்டமிட்டு செய்யப்பாருங்கள். தந்தையாரின் ஆரோக்யத்தில் அக்கறை காட்டுங்கள். அவருடன் கசப்புணர்வுகளும் வந்து செல்லும். 02.05.2018 முதல் 30.10.2018 வரை ராசிநாதன் செவ்வாய், கேதுவுடன் இணைவதால் தன்னம்பிக்கை குறையும். தாழ்வான எண்ணங்கள் தலைதூக்கும். கொஞ்சம் பொறுமையை இழப்பீர்கள். வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து ஏமாற வேண்டாம்.

புத்தாண்டின் தொடக்கம் முதல் 02.10.2018 வரை உங்களின் தனபூர்வ புண்யாதிபதியான குருபகவான் 12ம் வீட்டில் மறைந்திருப்பதால் மாதம் தவறாமல் அசலை செலுத்தினாலும் வட்டி கூடிக் கொண்டேப் போகிறதே என்று அச்சப்படுவீர்கள். வாகனத்திற்கான லைசன்ஸ், இன்சூரன்சை குறிப்பிட்ட காலத்திற்குள் புதுப்பிக்க தவறாதீர்கள். அபராதம் கட்ட வேண்டி வரும். சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும். பழைய இழப்புகள், ஏமாற்றங்களை அசை போட்டு தூக்கத்தை கெடுத்துக் கொள்ள வேண்டாம். அநாவசியமாக யாருக்காகவும் எந்த வாக்குறுதியும் தர வேண்டாம். பணப்பற்றாக்குறையால் வீடு கட்டும் பணி தடைபட்டு முழுமையடையும். ஆனால் 14.02.2018 முதல் 10.04.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ம் பாதத்தில் அதிசார வக்ரத்திலும் மற்றும் 3.10.2018 முதல் வருடம் முடியும் வரை குரு உங்களுடைய ராசிக்குள் அமர்வதால் திடீர் பயணங்களால் ஏற்பட்ட வீண் அலைச்சல்கள், அலைக்கழிப்புகள் குறையும்.

பல நாட்கள் தூக்கமில்லாமல் தவித்தீர்களே! இனி ஆழ்ந்த உறக்கம் வரும். என்றாலும் முன்கோபம் அதிகரிக்கும். உணர்ச்சிவசப்பட்டு வார்த்தைகளை விட வேண்டாம். ஜென்ம குருவாக வருவதால் கணவன் மனைவிக்குள் வீண் சந்தேகம், ஈகோ பிரச்னையை தவிர்ப்பது நல்லது. ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமை அதிகரிக்கும். யாரையும் யாருக்கும் பரிந்துரை செய்ய வேண்டாம். வங்கிக் காசோலையில் முன்னரே கையொப்பமிட்டு வைக்காதீர்கள். சில நேரங்களில் சூழ்நிலை கைதியாக சிக்கிக் கொள்வீர்கள். தர்மசங்கடமான சூழல்களும் அவ்வப்போது வரும்.




தன் சொந்த உழைப்பால் உயர விரும்பும் நீங்கள், பாதை மாறி சென்று பணம் சம்பாதிக்க தயங்குவீர்கள். பாவப்புண்யம் அடிக்கடி பார்ப்பீர்கள். அதிகம் ஆசைபடாமல் அடுத்தவர் சொத்து மீதும் கண் வைக்காமல், உதிக்கும் போது விதிக்கப்பட்டதை உணர்ந்து வாழ்பவர்கள் நீங்கள் தான். புத்தாண்டின் தொடக்கத்தில் உங்களுடைய ராசிக்குள்ளேயே சூரியனும், சுக்கிரனும் நிற்பதால் செயலில் வேகம் கூடும். அரசால் அனுகூலம் உண்டாகும். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உங்களின் பூர்வ புண்யாதிபதியான செவ்வாய் லாப வீட்டில் நிற்கும் நேரத்தில் இந்த 2018ம் வருடம் பிறப்பதால் உங்களை தலைநிமிர வைக்கும். வருமானம் உயரும். இந்த 2018ம் ஆண்டு முழுக்கவே சனி உங்கள் ராசிக்குள் நின்று ஜென்மச் சனியாக தொடர்வதால் உடல் நலம் பாதிக்கும். வாயு பதார்த்தங்கள், அசைவ, கார உணவுகளை தவிர்ப்பது நல்லது. நெஞ்சு படபடப்பு, தலைச்சுற்றல், கை, கால் மரத்துப் போகுதல், செரிமானக் கோளாறு, வயிறு உப்புசம், அசதி, சோர்வு வந்துச் செல்லும். மெடிக்ளைம் எடுத்துக் கொள்ளுங்கள்.

பெரிய நோய் இருப்பதைப் போன்ற பயம் வரக்கூடும். புத்தாண்டின் தொடக்கம் முதல் 02.10.2018 வரை உங்களின் ராசிநாதனும் சுகாதிபதியுமான குருபகவான் லாப ஸ்தானத்தில் அமர்ந்திருப்பதால் மற்றவர்களால் செய்ய முடியாத செயற்கரிய காரியங்களையும் செய்து முடிப்பீர்கள். புது வீடு கட்டி குடிப்புகுவீர்கள். ஆனால் 14.02.2018 முதல் 10.04.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ம் பாதத்தில் அதிசார வக்ரத்திலும் மற்றும் 3.10.2018 முதல் வருடம் முடியும் வரை குரு உங்களுடைய ராசிக்கு 12ம் வீட்டில் சென்று மறைவதால் எதிர்பாராத பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். கோயில் கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்துவீர்கள். பழைய கடனை நினைத்து அவ்வப்போது நிம்மதியிழப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். அவருக்கு சிறுசிறு அறுவை சிகிச்சைகளும் வந்து நீங்கும். தாய்வழி சொத்தை பெறுவதில் சிக்கல்கள் வந்துச் செல்லும்.

குடும்பத்தினருடன் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று நேர்த்திக் கடனை செலுத்துவீர்கள். வருடப் பிறப்பு முதல் 13.01.2018 வரை சூரியனும், சனியும் சேர்ந்திருப்பதால் தந்தையின் ஆரோக்கியம் பாதிக்கும். அவருடன் சின்ன சின்ன மோதல்கள் வந்து போகும். பிதுர்வழி சொத்துப் பிரச்னையில் இப்போது தலையிட வேண்டாம். அரசு விவகாரங்களில் அலட்சியப் போக்கை தவிர்க்கப்பாருங்கள். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். 10.03.2018 முதல் 02.05.2018 வரை உங்கள் பூர்வ புண்யாதிபதியான செவ்வாய் சனியுடன் சேர்ந்து பலவீனமடைவதால் மனதில் இனந்தெரியாத குழப்பம் வந்துப் போகும். பிள்ளைகளால் அலைச்சல், செலவுகள் இருக்கும். அவர்களின் உயர்கல்வி, உத்யோகம், திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் சற்று தாமதமாகும். பூர்வீக சொத்துப் பிரச்னை விஸ்வரூபமெடுக்கும். உடன்பிறந்தவர்கள் உங்களை தவறாகப் புரிந்து கொள்வார்கள்.

வீடு, மனை வாங்குவது, விற்பதில் வில்லங்கம் வந்து விலகும். 02.05.2018 முதல் 30.10.2018 வரை செவ்வாய், கேதுவுடன் இணைவதால் சில நேரங்களில் எல்லாம் இருந்தும் எதுவும் இல்லாதது போல ஆழ்மனதில் ஒரு வெறுமை, வெறுப்பு வந்துச் செல்லும். வீண் சந்தேகத்தை குறையுங்கள். மகளின் திருமண விஷயத்தில் அவசரம் வேண்டாம். வரன் வீட்டாரை நன்கு விசாரித்து முடிப்பது நல்லது. 22.04.2018 முதல் 15.5.2018 வரை சுக்கிரன் 6ல் மறைவதால் பேச்சால் பிரச்னைகளும் வரக்கூடும். இந்தப் புத்தாண்டு முழுக்கவே ராகு 8ம் வீட்டிலும், கேது 2ம் இடத்திலும் அமர்ந்திருப்பதால் வீரியத்தை விட்டு விட்டு காரியத்தில் கவனம் செலுத்தப்பாருங்கள். எதையும் அறிவுப்பூர்வமாக அணுகுவது நல்லது. குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுங்கள். பல் வலி, காது வலி, கண் எரிச்சல் வந்துப் போகும். முன்கோபத்துடன் பேசி சொற் குற்றம், பொருள் குற்றத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். சிலரின் தவறுகளை சுட்டிக் காட்டுவதன் மூலமாக சச்சரவுகளில் சிக்குவீர்கள். பேருந்துகளில் படிக்கட்டுகளில் நின்று பயணிக்க வேண்டாம். வெளிநாடு சென்று வருவீர்கள். பணப்பற்றாக்குறையால் வெளியில் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

வியாபாரிகளே! கணிசமாக லாபம் உயரும். அதிக வட்டிக்கு கடன் வாங்கி வியாபாரத்தை விரிவுபடுத்திக் கொண்டிருக்க வேண்டாம். விரலுக்குத் தகுந்த வீக்கம் வேண்டும் என்பார்களே, அதுபோல இருக்கிற வியாபாரத்தை ஓரளவு பெருக்கப் பாருங்கள். உங்களுக்கு எதிராக புதிது புதிதாக போட்டியாளர்கள் வருவார்கள். முடிந்த வரை கடன் தருவதை தவிர்க்கப் பாருங்கள். கடையை மாற்ற வேண்டிய சூழல் வரும். வேலையாட்களுடன் போராட வேண்டி வரும். குறைந்த லாபம் வைத்து விற்பதன் மூலமாக வாடிக்கையாளர்கள் வருவார்கள்.

அமைதியையும், அன்பையும் விரும்பும் நீங்கள், எல்லோரும் எல்லாம் பெற வேண்டுமென்று நினைப்பீர்கள். கவரிமானைப் போல கௌரவம் பார்க்கும் உங்களை பணத்தை காட்டி விலைக்கு வாங்க முடியாது. இந்த 2018ம் வருடம் சந்திரன் 5ம் வீட்டில் நிற்கும் போது பிறப்பதால் அடிப்படை வசதி வாய்ப்புகள் பெருகும். வருமானத்தை உயர்த்த அதிகம் உழைப்பீர்கள். இந்தாண்டு முழுக்க ராசிக்குள் கேதுவும், 7ல் ராகுவும் தொடர்வதால் எதிலும் ஒருவித சலிப்பு, முன்கோபம், தலைச்சுற்றல், ஒற்றை தலை வலி, கை, கால் மரத்துப் போகுதல் வந்துச் செல்லும். புத்தாண்டின் தொடக்கம் முதல் 02.10.2018 வரை உங்களின் விரயாதிபதியும்திருதியாதிபதியுமான குருபகவான் 10ம் வீட்டில் நிற்பதால் ஓய்வெடுக்க முடியாதபடி அடுத்தடுத்து வேலைச்சுமை அதிகரித்துக் கொண்டே போகும். இடைவிடாமல் உழைத்து கையில் எதுவும் தங்கவில்லையே என்ற ஏக்கம் வந்துப் போகும்.




முன்கோபம், டென்ஷனால் முக்கியஸ்தர்களின் நட்பை இழக்க வேண்டி வரும். மற்றவர்களை குறைக் கூறுவதில் எந்த பலனும் இல்லை. சிலர் உங்கள் பெயரை தவறாகப் பயன்படுத்த வாய்ப்பிருக்கிறது. சின்ன சின்ன ஏமாற்றங்கள், எதிலும் ஈடுபாடற்ற நிலை வரும். அசிங்கப்பட்டுவிடுவோமோ, அவமானங்களை சந்திக்க நேரிடுமோ, யாரேனும் தன்னைப் பற்றி தவறாக சொல்லி விடுவார்களோ என்றெல்லாம் அடிக்கடி யோசித்துக் கொண்டேயிருப்பீர்கள். அரசுக்கு முரணான விஷயங்களில் தலையிடாதீர்கள். வாகனம் அடிக்கடி பழுதாகும். உங்களிடம் திறமை குறைந்து விட்டதாக சில நேரங்களில் நினைத்துக் கொள்வீர்கள். அவ்வப்போது ஆழ்மனதில் ஒருவித பயம் வந்து நீங்கும். மற்றவர்கள் விஷயத்தில் அத்துமீறி தலையிட வேண்டாம். நியாயம் பேசப் போய் பெயர் கெடும். ஆனால் 14.02.2018 முதல் 10.04.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ம் பாதத்தில் அதிசார வக்ரத்திலும் மற்றும் 3.10.2018 முதல் வருடம் முடியும் வரை குரு உங்களுடைய ராசிக்கு 11ம் வீட்டில் சென்று அமர்வதால் உங்களின் புகழ், கௌரவம் ஒருபடி உயரும்.

பிரச்சனைகளை நேருக்குநேராக எதிர்கொள்ளும் ஆற்றல் கிடைக்கும். தீர்வு தேடி வெளியில் அலையாமல் உங்களுக்குள்ளேயே உங்கள் உள்மனசுக்குள்ளேயே விடையிருப்பதை இனி உணருவீர்கள். இந்தாண்டு முழுக்க உங்கள் ராசிநாதனும்தனாதிபதியுமான சனிபகவான் 12ல் மறைந்து விரயச் சனியாகத் தொடர்வதால் வீண் பழி, பண இழப்பு, ஏமாற்றங்கள் வந்து போகும். தன்னம்பிக்கை குறையும். செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்திற்கு ஆளாவீர்கள். மற்றவர்களின் ஆலோசனையை முழுமையாக ஏற்காமல் நீங்களும் ஒருமுறைக்கு பல முறை யோசித்து சில முடிவுகள் எடுக்கப்பாருங்கள். பழைய கடனைப் பிரச்னையால் சேர்த்து வைத்த கௌரவத்தை இழக்க நேரிடுமோ என்ற அச்சம் இருந்து கொண்டேயிருக்கும். 1.01.2018 முதல் 13.01.2018 வரை சூரியனும், சனியும் சேர்வதால் இக்காலக்கட்டத்தில் அரசு காரியங்களில் அலட்சியம் வேண்டாம்.

அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளில் தாமதம் வேண்டாம். கடன் பிரச்னை அதிகரிக்கும். 10.03.2018 முதல் 02.05.2018 வரை செவ்வாய் சனியுடன் சேர்ந்து நிற்பதால் உங்களுடைய தனித்தன்மையை இழந்து விடாதீர்கள். யாருக்காகவும் சாட்சி கையொப்பமிட வேண்டாம். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகமாகும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்துச் செல்லும். தவறானவர்களை எல்லாம் நல்லவர்கள் என நினைத்து ஏமாந்து விட்டோமே என்று ஆதங்கப்படுவீர்கள்.02.05.2018 முதல் 30.10.2018 வரை செவ்வாய், கேதுவுடன் இணைவதால் உணர்ச்சிவசப்பட்டு யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். உறவினர், நண்பர்கள் செய்த துரோகங்களையெல்லாம் நினைத்து கவலைப்பட்டு நிம்மதியை இழந்து விடாதீர்கள்.

அடுத்தவர்களை குறைக் கூறுவதை நிறுத்துங்கள். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். பால்ய நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து ஏமாறாதீர்கள். விளம்பரங்களை பார்த்து சோப்பு, ஷாம்பு, வாசனை திரவியங்களையெல்லாம் மாற்றிக் கொண்டிருக்க வேண்டாம். அலர்ஜி வரக்கூடும். 16.05.2018 முதல் 10.06.2018 வரை சுக்கிரன் 6ல் மறைவதால் சிறுசிறு வாகன விபத்துகள் வந்து நீங்கும். எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள் அடிக்கடி பழுதாகும்.

வியாபாரிகளே! மற்றவர்களின் பேச்சை கேட்டு அனுபவமில்லாத தொழிலில் முதலீடு செய்து சிக்கிக் கொள்ளாதீர்கள். ரகசியங்கள் கசியாமல் பார்த்துக் கொள்ளுங்கள். விளம்பரத்தையும் பயன்படுத்துங்கள். வர வேண்டிய பாக்கிகளை போராடித்தான் வசூலிக்க வேண்டி வரும்.

பாசத்தால் அனைவரையும் கட்டிப் போடுபவர்களே! கடமைத் தவறாதவர்களே! காரியத்தில் கண்ணாக இருந்து காய் நகர்த்துபவர்களே! உங்களுடைய சப்தமாதிபதியான சூரியன் லாப வீட்டில் வலுவாக அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்த 2018ம் ஆண்டு பிறப்பதால் உங்களுடைய ஆளுமைத் திறன், நிர்வாகத் திறமை அதிகரிக்கும். சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். இந்த 2018ம் ஆண்டு முழுக்கவே உங்களுடைய ராசிநாதனும் விரையாதிபதியுமான சனிபகவான் ராசிக்கு லாப வீட்டில் வலுவாக அமர்ந்திருப்பதால் தன்னம்பிக்கையுடன் தலை நிமருவீர்கள். புத்தாண்டின் தொடக்கம் முதல் 02.10.2018 வரை உங்களின் அஷ்டமதனாதிபதியுமான குருபகவான் 9ம் வீட்டில் அமர்ந்திருப்பதால் பல முறை முயன்றும் முடிக்க முடியாத வேலைகளை முடித்துக் காட்டுவீர்கள்.




தந்தையாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். அவர்வழி உறவினர், நண்பர்கள் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். ஆனால் 14.02.2018 முதல் 10.04.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ம் பாதத்தில் அதிசார வக்ரத்திலும் மற்றும் 3.10.2018 முதல் வருடம் முடியும் வரை குரு உங்களுடைய ராசிக்கு 10ம் வீட்டில் நுழைவதால் சிறுசிறு அவமானம், ஏமாற்றம் வந்து நீங்கும். பழைய பிரச்னைகள், சிக்கல்கள் மீண்டும் வந்துவிடுமோ என்றெல்லாம் அச்சப்படுவீர்கள்.

1.01.2018 முதல் 13.01.2018 வரை சூரியன் சனியுடன் சேர்வதால் இக்காலக்கட்டத்தில் போராட்டங்களைச் சமாளிக்கும் பக்குவம் கிடைக்கும். அரசால் அனுகூலம் உண்டு. பூர்விக சொத்தால் வருமானம் வரும். 10.03.2018 முதல் 02.05.2018 வரை செவ்வாய் சனியுடன் சம்பந்தப்பட்டு பலவீனமடைவதால் சின்ன சின்ன காரியங்கள் கூட தடைப்பட்டு முடிவடையும். உத்யோகத்தில் வேலைச்சுமையால் டென்ஷன் அதிகரிக்கும்.

எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாதபடி செலவுகளும் இருக்கும். பணப்பற்றாக்குறையும் இருக்கும். மற்றவர்களுக்கு ஜாமீன், கேரண்டர் கையொப்பமிட வேண்டாம். வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை. சிறுசிறு விபத்துகள் நிகழக்கூடும். சொத்து வாங்கும் போது தாய்பத்திரத்தை சரி பார்த்து வாங்குவது நல்லது. சொத்துக்களை விற்கும் போதும் ஏமாந்துவிடாதீர்கள். சிலர் சின்ன தொகையை முன்பணமாக கொடுத்து விட்டு ஆறு மாதம், ஏழு மாதம் கழித்து மீதித் தொகை தராமல் இழுத்தடிக்க வாய்ப்பிருக்கிறது. எனவே கொஞ்சம் கவனமாக செயல்படுங்கள். 02.05.2018 முதல் 30.10.2018 வரை ராசிநாதன் செவ்வாய், கேதுவுடன் இணைவதால் சொன்ன சொல்லை நிறைவேற்ற முடியாமல் போகும். தவறு செய்யாமலேயே உங்களை சிலர் குற்றவாளியாக்க முயற்சி செய்வார்கள். கூடாப்பழக்க வழக்கங்களை தவிர்ப்பது நல்லது. வெளிவட்டாரத்தில் யாரையும் தாக்கியும் பேச வேண்டாம், தூக்கியும் பேச வேண்டாம்.

பணம் வாங்கித் தருவதிலும், கல்யாண விஷயத்திலும் குறுக்கே நிற்காதீர்கள். 11.6.2017 முதல் 04.7.2018 வரை சுக்கிரன் 6ல் மறைவதால் அலைப்பேசியில் பேசிக் கொண்டு வாகனத்தை இயக்க வேண்டாம். வாகனம் பகுதாகும். கணவன்மனைவிக்குள் யார் ஜெயிப்பது, யார் தோற்பது என்ற போட்டிகளெல்லாம் வேண்டாம். புத்தாண்டு தொடக்கம் முதல் வருடம் முடியும் வரை ராகு 6ம் வீட்டில் தொடர்வதால் மறைமுக எதிரிகளால் ஆதாயமடைவீர்கள். அதிக வட்டிக் கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். திருமணம் தள்ளிப் போனவர்களுக்கு கூடி வரும். விலை உயர்ந்த ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். பிள்ளைகளின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். வி.ஐ.பிகள் வீட்டு விசேஷங்களில் கலந்துக் கொள்ளுமளவிற்கு நெருக்கமாவீர்கள்.

எங்குச் சென்றாலும் முதல் மரியாதை கிடைக்கும். ஷேர் மூலம் பணம் வரும். வெளிநாட்டிலிருப்பவர்களால் ஆதாயமடைவீர்கள். உங்களுக்கும் அயல்நாட்டில் வேலை கிடைக்க வாய்ப்பிருக்கிறது. வேற்றுமதத்தை சார்ந்தவர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். அடுத்தடுத்த சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். பால்ய நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். புது பதவிகள் தேடி வரும். ஆனால் கேது 12ம் வீட்டில் நீண்ட நாட்களாக போக நினைத்த குலதெய்வக் கோயிலுக்கு குடும்பத்தினருடன் சென்று நேர்த்திக் கடனைச் செலுத்துவீர்கள். சில நாட்களில் தூக்கம் குறையும். திட்டமிடாத பயணங்களும், அலைச்சல்களும் இருந்துக் கொண்டேயிருக்கும். உறவினர் வீட்டு திருமணம், கிரகப் பிரவேசத்தை நீங்களே செலவு செய்து எடுத்து நடத்துவீர்கள். பணப்பற்றாக்குறை நீடித்தாலும் கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

வியாபாரிகளே! இரட்டிப்பு லாபம் உண்டாகும். அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். சந்தை நிலவரத்தை அறிந்து அதற்கேற்ப முதலீடு செய்து வாடிக்கையாளர்களை கவர்வீர்கள்.




அனைத்தையும் அறிந்து வைத்திருக்கும் நீங்கள், தனக்கென ஒரு பிரச்னை வந்தால் தடுமாறுவீர்கள். உங்களுடைய முயற்சிஸ்தானமான 3வது ராசியில் இந்த 2018ம் ஆண்டு பிறப்பதால் சவாலான காரியங்களையும் சாதூர்யமாக முடித்து வெற்றி பெறுவீர்கள். தடைகள் யாவும் நீங்கும். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். புதியவர்கள் அறிமுகவார்கள். வர வேண்டிய பணமெல்லாம் கைக்கு வரும். இந்த ஆண்டு முழுக்க ராகு உங்கள் ராசிக்கு 5ம் வீட்டில் நிற்பதால் பிள்ளைகளின் பொறுப்பில்லாத் தனத்தை நினைத்து வருந்துவீர்கள். அவர்களின் போக்கிலேயே அவர்களை விட்டுப்பிடிப்பது நல்லது. தாய்வழி உறவினர்களிடையே மனஸ்தாபங்கள் வெடிக்கும். பூர்வீக சொத்துக்காக அதிகம் செலவு செய்ய வேண்டி வரும். யாருக்கும் பணம், நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம்.


சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விஷயங்களை பகிர்ந்துக் கொள்வது நல்லதல்ல. கேது உங்கள் ராசிக்கு 11ம் வீட்டில் அமர்வதால் பழைய சிக்கல்களை புதிய கோணத்தில் அணுகி வெற்றி பெறுவீர்கள். வரவேண்டிய பணம் கைக்கு வரும். உடன்பிறந்தவர்களுக்காக எவ்வளவு செய்தும் நம்மை புரிந்து கொள்ளவில்லையே என்று அவ்வப்போது வருந்தினீர்களே! அந்த நிலை மாறும். பாசமாக நடந்து கொள்வார்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்குக் கூடும். புத்தாண்டின் தொடக்கம் முதல் 02.10.2018 வரை உங்களின் ராசிநாதனும் உத்யோகஸ்தானாதிபதியாகிய குருபகவான் 8ம் வீட்டில் நிற்பதால் பணம் எவ்வளவு வந்தாலும் எடுத்து வைக்க முடியாதபடி செலவுகள் துரத்தும் என்றாலும் திடீர் பணவரவும் உண்டு.

சொந்தபந்தங்களுக்காக சில சமயங்களில் அலைய வேண்டி வரும். வீண்பழிச் சொல்லுக்கு ஆளாவீர்கள். ஆனால் 14.02.2018 முதல் 10.04.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ம் பாதத்தில் அதிசார வக்ரத்திலும் மற்றும் 3.10.2018 முதல் வருடம் முடியும் வரை குரு உங்களுடைய ராசிக்கு 9ம் வீட்டில் சென்று அமர்வதால் எதிலும் வெற்றி பெறுவீர்கள். வி.ஐ.பிகள் அறிமுகமாவார்கள். கௌரவப் பதவிகள் தேடி வரும். திருமணம், சீமந்தம் போன்ற சுப நிகழ்ச்சிகள் வீட்டில் நடக்கும். மனைவியுடன் இருந்த மோதல்கள் நீங்கும். குழந்தை வரம் வேண்டி கோயில் கோயிலாக அலைந்தீர்களே, கவலை வேண்டாம் அழகான வாரிசு உண்டாகும். செவ்வாய் 8ல் நிற்கும் போது இந்தாண்டு பிறப்பதால் உடன்பிறந்தவர்களுடன் மனஸ்தாபங்கள் வரும். சொத்து விஷயங்களை சுமுகமாக பேசித் தீர்க்கப் பாருங்கள்.

இந்தாண்டு முழுக்க உங்கள் லாபாதிபதியும் விரயாதிபதியுமான சனிபகவான் 10ல் தொடர்வதால் உங்களிடம் மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். பணபலம் கூடும். நட்பு வட்டம் விரியும். புது பதவிகள், பொறுப்புகள் தேடி வரும். பொது விழாக்களை தலைமையேற்று நடத்துவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்கு சாதகமான தீர்வு கிடைக்கும். வெளிநாட்டிலிருக்கும் உறவினர், நண்பர்களால் திடீர் திருப்பங்கள் ஏற்படும். தந்தைவழியில் அனுகூலம் உண்டு. ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். இந்த ஆண்டு தொடக்கம் முதல் 13.01.2018 வரை உள்ள காலக்கட்டங்களில் சூரியனுடன் சனியும் சேர்ந்திருப்பதால் எதிர்பாராத பணவரவு உண்டு. வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். அலுவலகத்தில் அவ்வப்போது தொந்தரவுகள் வந்து நீங்கியபடியே இருக்கும். 10.03.2018 முதல் 02.05.2018 வரை சனியுடன் செவ்வாய் சேர்ந்திருப்பதால் உத்யோகத்தில் மரியாதை குறைவான சம்பவங்கள் நிகழக் கூடும். மேல் அதிகாரியுடன் பணிப்போர் வந்து நீங்கும்.

02.05.2018 முதல் 30.10.2018 வரை செவ்வாய் கேதுவுடன் இணைந்திருப்பதால் இக்காலக்கட்டங்களில் வற்றிய பணப்பை நிரம்பும். கைமாற்றாக இருந்த கடனையும் தந்து முடிப்பீர்கள். ஷேர் மூலம் பணம் வரும். பழைய கடனை அடைக்க வழி பிறக்கும். அயல்நாட்டிலிருக்கும் உறவினர்கள், நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். வேற்றுமொழி, மதத்தவர்களால் ஆதாயமடைவீர்கள். வி.ஐ.பிகள்,தொழிலதிபர்களின் நட்பை சரியாக பயன்படுத்திக் கொள்வீர்கள். 5.7.2018 முதல் 1.8.2018 வரை சுக்ரன் 6ல் நிற்பதால் சிறுசிறு விபத்துகள் வரக்கூடும். குடிநீர், கழிவு நீர் குழாய் அடைப்பு வரும். டி.வி., ஃப்ரிட்ஜ், வாஷிங் மெஷின் போன்ற சாதனங்கள் பழுதாகும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். சளித்தொந்தரவு இருக்கும். சைனஸ் இருப்பதைப் போன்ற லேசாக தலை வலி வந்துப் போகும்.

வியாபாரிகளே! முன்பு இருந்த போராட்டம், தடைகள் நீங்கி இப்போது மனநிறைவுடன் காணப்படுவீர்கள். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். போட்டியாளர்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அதிரடியாக செயல்படுவீர்கள். சொந்த இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். நவம்பர், டிசம்பர் மாதங்களில் லாபம் இரட்டிப்பாகும். தள்ளிப் போன வியாபார வாய்ப்புகள் மீண்டும் கிடைக்கும்.



# அத்துமீறல் ஓர் அலசல்

## வைரமுத்து அவர்களுக்கு சுகி சிவம் கேள்விகள்?

**சொல்வேந்தர் சுகி.சிவம்**

*1. பரந்த வாசிப்பும் சிறந்த மொழித்திறனும் சொந்தச் சிந்தனைகளும் உடைய மதிப்புறு மனிதர் கவிஞர் வைரமுத்து என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் ஆண்டாள் குறித்த கட்டுரையில் சர்ச்சைக்குரிய கருத்துக்களை முன்வைத்ததால் அவரிடம் சில கேள்விகள் எழுப்பவேண்டி உள்ளது.*

*2. இண்டியானா பல்கலைக்கழகத்தின் ஆய்வுச் செய்தியைப் பதிவிடும்போது - அதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதையும் எழுதாமல் நழுவியது ஏன்? இது தவறு, அல்லது சரி என்று காரண காரியங்களுடன் எழுதவேண்டியது நேர்மையான இலக்கியவாதியின் கடமை அல்லவா? அந்த நேர்மை உங்களிடம் இல்லாமல் போனது ஏன்?*

*3. பலரது பலகால நம்பிக்கைகளுக்குப் பகையாக (முரணாக அல்ல) ஒரு செய்தியை எழுதும்போது தக்க ஆதாரங்களையும் நிரூபணங்களையும் தந்திருக்க வேண்டும். மேம்போக்கான மேற்கோள் எவ்வாறு ஆதாரமாக நிரூபணமாக ஆகமுடியும்? ஆண்டாள் ஸ்ரீரங்கத்தில் அவ்வாறு வாழ்ந்து காலம் கழித்தாள் என்பதற்கு என்ன சான்றுகளைச் சேகரித்தீர்கள்?*

*4. பக்தி இலக்கியம் பற்றி ஏதோ ஒரு எதிர்பார்ப்புடன் எழுதிக்கொண்டிருக்கும் நீங்கள், பகுத்தறிவு நண்பர்கள் கண்டனங்களுக்குள்ளிருந்து தப்ப அவர்களைத் திருப்திப்படுத்த இப்படியொரு சாமர்த்தியத்தைக் கையாண்டீர்களா?*

*5. சமண - பௌத்த சமயங்களின் கடு நெறிகளுக்கு மாறான துய்ப்பின்; கதவுகளைத் திறந்துவிட்ட அக்கால மதநெறிகளின் குறியீடு - ஆண்டாள் என்கிறீர்கள். இது பிழை. சமண - பௌத்த மதங்களால் வாழ்க்கை இறுக்கமானதும் பக்தி இயக்கங்கள் அதனைத் தளர்த்த*



முயன்றதும் வரலாற்று உண்மை. அறிவேன். ஆனால் துய்ப்புநெறி சமயத்தின் செய்தி அன்று. நுட்பமான வேறுபாடு தெரியவேண்டும். உலகியல் துய்ப்பினும் பரம்பொருள் துய்;ப்பே மேலானது என்கிற அணுகுமுறையே ஆண்டாளின் செய்தி. 'இற்றைப் பறை கொள்வான் அன்றுகாண் கோவிந்தா எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோமே யாவோம் உமக்கே நாம் ஆட்செய்வோம் மற்றைநம் காமங்கள் மாற்று' என்கிறாள் ஆண்டாள். மற்றை நம் காமங்கள் மாற்று என்பது உலகியல் துய்ப்புக்கு எதிரான நிலைப்பாடு அல்லவா.

6. உண்மையில் ஆண்டாளின் தமிழ் ' கடவுளைக் காதலிக்கும் அச்சமற்ற அழகியல் உணர்வின் உச்சபட்ச வெளிப்பாடு. ஆன்மாவின் அனுபவத்தைச் சரீரத்தின் தாகமாகவும் சொல்ல முயன்ற முயற்சி. கடினமானதாகக் கண்டறியப்பட்ட கடவுள் தத்துவத்தை, கலவி, காமம், காதல் என்கிற அகநிலையில் பேசமுடியும் என்று நிரூபித்த கவிதாயினியின் சாதனை அது. முக்தி என்று ஆன்ம விடுதலை பேசிய ஒரு சமயத்தின் முழுச் சுதந்திரம் வெளிப்படுத்திய தமிழ். கோதைத்தமிழ். ஆண்டாள்தமிழ் பதின்மூன்று நூற்றாண்டுகளைக் கடந்தும் உயிர் வாழ்கிறது. ஆனால் அடுத்த நூற்றாண்டுவரை உங்கள் கவிதைகள் தாக்குப் பிடித்தால் அதுவே பெரிய விஷயம் என்பது புரியவேண்டாமா?

7. அர்ச்சாவதாரத்தோடு எலும்பும் சதையுமுடைய பெண் எவ்வாறு கலக்க முடியும் என்று அறிவு கேள்வி எழுப்புமானால் இறைபணியிலும் கோயில் பணியிலும் காலம் கழித்துக் கரைந்து கலந்த திலகவதியார் போல ஸ்ரீரங்கத்தில் ஆண்டாள் வாழ்ந்திருக்கக் கூடும் என்று எழுதியிருந்தால் சமய உலகம் இவ்வளவு கொதிப்படைந்திருக்காது.

8. உங்கள் வார்த்தைத் தேர்வில் வன்மம், குரூரம், மெல்லிய வஞ்சகம் வெளிப்படுவதாகவே பக்தர்கள் வருந்துகிறார்கள். குருதி இறைச்சி என்ற சொற்களில் எந்தப் பிழையுமில்லை. என்றாலும் 'ஊனினை உருக்கி' என்ற



மணிவாசகரையும் 'தசையினைத்தீ கடினும்' என்ற பாரதியையும் நீங்கள் ஒருமுறை கூர்ந்து கவனிப்பது அவசியம். சமய உலகிற்கு என்று மரபு இருக்கிறது. நீங்கள் ஒரு நாத்திகராக அறியப்பட்டவர். அப்படியிருக்கக் காயப்படுத்தும் வார்த்தைக்ளில் கவனம் காட்டத் தவறியது ஏன்?

9. வைணவக் குடும்பங்களில் ஒவ்வொரு பெற்றோரும் தம் மகளை ஆண்டாளாகப் பாவித்து ஆண்டாள்கொண்டை போட்டு மாப்பிள்ளையை ரங்கமன்னராக்கி மணமுடித்துக் கொடுப்பதே வழக்கம். பெற்ற தகப்பன் பெரியாழ்வாராவது அந்த ஒருகணம்... ஒரேகணம்.... அந்த அழகான கனவை அசிங்கமான பதிவால் கலைத்து என்ன நன்மை பெறுகிறீர்கள்?

10. சாதிக்கட்டுமானம் காரணமாக ஆண்டாளைச் சமூகம் நிராகரிப்புச் செய்திருக்கலாம் என்பது அபத்தமான கற்பனை. வீட்டிற்குள் வரவேற்காத சமூகம் கோயிலுக்குள் குடியேற்றிக் கொண்டாடி இருக்குமா என்ன? கடவுளையே மணப்பேன் என்கிற ஆண்டாள் பெரிதினும் பெரிதுகேள் என்கிற பாரதியின் முன்னோடி. சமூக நிராகரிப்பு என்ற வார்த்தைகளால் அவளது உச்சபச்ச உயரத்தைக் கொச்சைப்படுத்த வேண்டுமா என்ன? நிவேதனம் கூட நூறு அண்டா, வெண்ணெய் நூறு அண்டா சர்க்கரை பொங்கல் என்று பெரிதினும் பெரிது குறித்துப் பேசிய பெண்பிள்ளை, உள்ளூர் மாப்பிள்ளைகளை ஒதுக்கிவிட்டு வைகுந்தவாசிக்கு வாழ்க்கைப்பட நினைத்ததே அவளது தனிச்சிறப்பு.

கட்டுரை முழுவதும் ஆண்டாளை வெளிப்படுத்தும் அக்கறையை விட உங்கள் பரந்த புலமையை வெளிப்படுத்தும் வேகமே வெளிப்படுகிறது. நாத்திகராக இருப்பது உங்கள் சௌகர்யம். ஆனால் அதற்காக ஆண்டாளிடமிருந்து கடவுளைக் கழித்தபிறகு என்று கட்டுரையை முடித்திருக்க வேண்டாமே. இறைநிலையை ஆண்டாளிடமிருந்து கழிக்கமுடியாது. கழித்தபின் ஆண்டாள் அங்கே இருக்கமுடியாது. ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா வாங்கிவந்து பால்கோவாவை எறிந்துவிட்டு பிளாஸ்டிக் பையைச் சேகரிக்கும் முயற்சியைப் பைத்தியக்காரத்தனம் என்று சொல்லாமல் பாராட்டவா முடியும்? நாத்திகர்களைத் திருப்திசெய்ய ஆத்திகர்களை வலிக்கச் செய்வது விவேகமா கவிஞரே?

11. அத்துமீறலில் இத்தனை அத்துமீறலா?



# உள்ளும் வெளியும்

(சிறுகதை)

நவஜோதி ஜோகரட்னம்
லண்டன்

ஊரில் இருக்கேக்க வலப்புறத்தில் கீரிமலைச் சிவன் கோயில் மணியும், இடப்புறத்தில் சந்தான மாதா கோயில் மணியும் அடிக்கிற ஞாபகத்தை எழுப்புமாப்போல் காலையில் கோயில் மணி அடித்தது. ஐரோப்பாவிற்கு புலம்பெயர்ந்து வந்து எவ்வளவோ காலத்திற்குப் பிறகு இப்போதுதான் இப்படியொரு கோயில் மணி மலர்விழியின் காதில் ஒலிக்கிறது. அதுவும் இந்த வீட்டுக்கு வந்த பின்னர்தான். மலர்விழியின் வீட்டுக்கு முன்னால்தான் அந்தப் பெரிய கோயில். லண்டன் மகாராணியார் வணங்குகிற 'சேர்ச்ஜ் ஒவ் இங்லன்ட்' என்ற சமயக் கோயில். 'சென் மைக்கல் அன்ட் ஒல்ஏஞ்சல்ஸ்' என்று கோயிலுக்கு முன்னால் எழுதி ஒட்டியிருக்கினம். இப்போது கிறிஸ்தவ சமயத்துக்குள்ளும் பல பிரிவுகளெண்டு மலர்விழிக்குத் தெரியும். சமய நம்பிக்கை இருக்கோ இல்லையோ 'மணி ஒலிக்கும் போதெல்லாம் மனது சந்தோஷமாக இருக்கிறதே!' என மலர்விழி எண்ணிக்கொள்வதுண்டு. அவ்வேளைகளில் கோயிலைப் பார்த்தபடி வீட்டில் இருக்கும்; மேசையில் மெழுகு விளக்கை மலர்விழி ஏற்றி வைப்பதுண்டு. லண்டனில் வெளிச்சம் அற்ற குளிர் கூடிய மார்கழி மாதம்.

பிரத்தியேகமான காலை வேளைச் சூரியனின் தெறிப்பில் இன்று சென்மைக்கேல் சிலை கம்பீரமாகத்தான்



காட்சி அளிக்கின்றது. மலர்விழி சந்தித்த பல்வேறு மனிதர்களின் பேச்சும், மனிதவாழ்வின் கலகலப்பான உறவுகளும் புகைப்படச்சுருளாட்டம் மலர்விழியின் மனதிற்குள் ஓடிக்கொண்டிருக்கிறது.

காலைக் கோயில் மணியைத் தொடர்ந்து வீட்டு ரெலிபோன் ஒலித்துக் கொண்டிருக்கிறது. 'விடியற்காலையில் என்ன செய்தியோ' என்ற ஒரு தவிப்போடு தொலைபேசி ரிசிவரைத் தூக்கினாள் மலர்விழி.

'குட் மோர்ணிங் மலர்விழி!; ஆங்கிலேயர்களும் ஒருங்கிணைந்து குளிர்கால நத்தார் புதுவருட நிகழ்ச்சி ஹரோ ஆட் சென்ரரில் செய்கிறார்கள். நான் நேரத்துடன் உங்கள் பெயரையும் எனது பெயரையும் எதற்கும் சும்மா பதிவு செய்திருந்தேன். இன்றைய காலநிலை கொஞ்சம் நன்றாக இருப்பதால் நான் அதற்குச் செல்லலாம் என்று இருக்கிறேன். நீங்களும் விரும்பினால் என்னுடன் வரலாம். பலவிதமான மக்களோடு உறவுகொள்ள விரும்புகின்றவர்தானே நீங்கள். அவர்களைப் பற்றி ஏதோ ஒரு வகையில் பதிவு செய்வதில் ஆர்வமும் காட்டுபவர். இந்நிகழ்ச்சியும் உங்களுக்கு ஒரு புதிய அனுபவமாக இருக்கும். பன்னிரண்டு மணிக்குப் பின்னர்தான் அதன் ஆரம்பம். இச்செய்தியை கூறுவதற்காகத்தான் அதிகாலையில் தொலைபேசியில் அழைத்தேன். குறுகியகால அழைப்பு என்று குறைவிளங்காதீர்கள். விரும்பினால் மட்டும் நீங்கள் வரலாம்' என்று கூறிவிட்டு தொலைபேசியை வைத்துவிட்டார் புஷ்ரா அன்ரி.

அம்மாடியோ பரவாயில்லை. நல்ல அழைப்போடு அமைந்த ஒரு செய்தி. புஷ்ரா அன்ரியோட வெளிக்கிட வேண்டும் என்ற எண்ணம் மலர்விழிக்கு உடனேயே உதித்துவிட்டது. பிரெஞ்சு மக்களோடு நெருங்கிப்பழகிய அனுபவம் மலர்விழிக்கு நிறையவே உண்டு. ஆனால் ஆங்கிலேயர்களோடு வேலை செய்தாலும் நெருக்கமான உறவு என்பது குறைவுதான் அவளுக்கு. பிரெஞ்சுக்காரர் மாதிரி ஆங்கிலேயர்கள் ஏன் பழகுகிறார்கள் இல்லை என்று அடிக்கடி யோசிப்பாள். ஆனால் பதில் இன்னும் இல்லை.

ஆங்கிலேயர்களின் நிகழ்ச்சிக்கு உடுத்திக் கொண்டு போகிறதுக்கு பெரிசாக மினக்கெடத் தேவையில்லை. ஒரு கோட் சூட், குளிர்கொட்டுவதால் ஒரு தொப்பியும் போட்டு எடுப்பாக லிப்ஸ்ரிக்கும் சொண்டுக்கு அடித்துவிட்டால் விசயம் முடிந்தது. இங்கு பல்மொழி பேசுகின்றவர்களும் வருவார்கள் என்றுதான் புஷ்ரா அன்ரி சொன்னவர் நினைவில் தட்டுகிறது.

'டும் டம்' என்று என்று காலடிச் சத்தம் கேட்கிறது. மாமியின்; சத்தம் தான். சந்தேகமேயில்லை. அமைதியாக எழும்பி நடக்க வேண்டும் என்றால்... அதெங்க... விடியற்காலையில் நெஞ்சுக்குள்ள குத்துகிற மாதிரித்தான் கேட்குது.

மலர்விழியும் திருமணமாகி பல வருடங்கள் கழிந்துவிட்டன. காதல் திருமணம் தான். எதிர்ப்புகளுக்கு மத்தியில் செய்த திருமணம். இப்படி ஆசைப்பட்டுத் திருமணம் செய்துவிட்டு வெவ்வேறு பிரச்சனைகளில் சில நாட்களிலேயே விலகிச் சென்றவர்களைப் பார்க்க முடிகிறது. நவீன உலகத்தில் இப்படித்தான் அதிகம் நடக்கிறது. ஆனால் பிரிந்துபோகவும் மனமில்லாமல் முடிவெடுக்கவும் முடியாத ஒரு புதிர்ப் பயணங்களும் நடக்கிறது. இத்தகைய ஒரு கறகறத்த விசித்திரமான வாழ்க்கையில் தான் மலர்விழி தன் வாழ்க்கையை மாமியோடும் சேர்ந்து நெடுங்காலமாகப் பயணித்துக்கொண்டிருக்கிறாள்.

ஒன்றில தொடங்கி ஒவ்வொன்றாக வந்து மாமியுடன் வாய்த்தகராறு பட்டுக்கொண்டு சந்தோஷமில்லாமல் நாட்பொழுது வீட்டில் கழிவதைவிட வெளியில் சென்று வந்தால் மனது சந்தோஷமாகவிருக்கும் என மலர்விழி மனதுக்குள் நினைக்கும்போதே....

'மாமியாரின் குரல் தொனிப்பதும் குசினிப்பாத்திரங்களைப் போட்டடித்து அடுக்கும் சத்தமும் கமாரிட்டுக் கேட்டது. இந்தாரும் இந்த பச்சைப் பைலை கவனமாக பாதுகாப்பான இடத்தில வையும். இந்த வீட்டுக்கான முக்கிய விடயங்கள் இருக்கின்றன'

ஒன்றுமே மலர்விழிக்கு தெரியாது என்பதுபோல்த்தான் மாமியார் கதைப்பார். மனிதர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் வித்தியாசமான திறமைகள் இருக்கின்றனதானே என்றுமலர்விழி எண்ணிக்கொள்வாள்.

'அறிஞை மாமியார் விடியற்காலையே தொடங்குகிறார்' மலர்விழி மனதிற்குள் முணுமுணுக்கிறாள். இதயத்தில் பட படப்பு. ஆளையாள் முட்டிக்கொள்ளுகிற சிறிய வீட்டில் விடியற்காலையில் எழும்பிய உடனேயே மலர்விழி வீடு சுத்தமாக்கத் தொடங்கிவிடுவாள். 'தினமும் சுத்தமாக்கும் வீடு பார்ப்பதற்கு அழகாகத்தான் இருக்கிறது' என்று எண்ணிய மலர்விழி காலையில் பாத்றூம் யன்னலைத் துப்பரவு செய்யும்போது யன்னல்சீலைக் கம்பி அப்படியே உடைஞ்சு விழுந்துவிட்டது. இப்போ அதற்கும் தொடங்கப்போகிறார் மாமியார் என்று நினைக்கும்போதே!

'எப்ப பார்த்தாலும் நல்லாக ஒட்டினமாதிரித் தான் யன்னல் சீலையை இழுத்துவிடுவீர். கொஞ்சம் தூங்கும்படி விட்டால்தான் எந்தக் கம்பியில் பிடித்து இழுக்க வேண்டும் என்று தெரியும். ஒரே அடியாகப் பிடிச்சு இழுத்து அறுத்துக் கொட்டிக் கிடக்கு. இனி வீட்டுக் காரங்களுக்கு என்ர பிள்ளை அடிச்சுப் பல்லைக் காட்டிக்கொண்டிருக்க வேண்டும்'

சமையல் அறைப்பக்கம் 'டும் டும்' என்றபடி திரும்பவும் நடைச்சத்தம் அதிருது.

பக்கத்து அறையில் பெரியவன் நித்திரை கொள்கிறான். அவனுக்கு நித்திரை குளம்பப்போகுது. அவன் ஒருபக்கம் 'தன்னை நித்திரைகொள்ள விடாமல் கத்துதுகள்' என்று உறுமப் போறான் என்று மலர்விழி எண்ணிக்கொண்டாள்.

'இப்ப உடைஞ்ச பகுதியைப் பொருத்திப் பார்த்தேன். அது ஒண்டுமே செய்ய ஏலாமல் இருக்கு. இனிப் புதிசாகத்தான் வேண்டிப்போடவேண்டும். திரும்பவும் ஜன்னல் மறைவுச் ஷடோ அறுந்த படலம்... தொடருது'

'என்ன இழுக்கும்போது அறுந்துவிட்டது. இப்ப என்ன செய்வது? புதிதாக ஒன்றை வேண்டிப்போட்டால் முடிஞ்சுது பிரச்சனை.



இதுக்குத் தானே கடைகள் இருக்குது' மலர்விழி மாமியாருக்குக் கருத்துக் கூறினாள். சின்ன சின்ன சாதாரண பிரச்சினைதானே இவை! நாள் தொடங்கும்போதே 'தொண தொண' என்று கொண்டு; தொடங்குகின்றார் மாமியார் என்று தனக்குள் எண்ணிக்கொண்டாள் மலர்விழி.;

சனிக்கிழமை இன்று. லீவு நாள். மர்மமான மனத்திரையில் இருந்து இன்னும் என்னென்ன புதிர்கள் வரப்போகிறதோ! எந்தெந்தக் கோணத்தில் அதன் சிறகு விரியப்போகிறதோ! அதற்கிடையில் புஷ்ரா அன்ரி வீட்டை போய் அவவுடன் சேர்ந்துகொண்டால் புதுப்புது விடங்களும் சொல்லி புத்திமதிகளும் கூறுவார்... என்று மலர்விழியின் மனதில் எண்ணங்கள் விசித்திரமாக விரிகிறது.

தொலைபேசி திரும்பவும் 'டிங் டிங'; என்று ஒலித்துக்கொண்டிருக்கிறது.

வீட்டுத் தொலைபேசிக்கு வருவதெல்லாம் மலர்விழிக்கான அழைப்புத்தான் என்று முடிவு எடுத்துவிடுவார் மாமியார். மலர்விழி சேருவதெல்லாம் லூசுக்கூட்டங்கள். சுமேரியாக்கண்டம் பற்றி வாசிக்கிற லூசுக் கூட்டமாக்கும். மாமி கூறிக்கொண்டிருக்கும்போதே.

ஹலோ என்று பேச்சை ஆரம்பித்துவிட்டாள் மலர்விழி.

'நான் சுமதி கதைக்கிறேன். எப்படி இருக்கிறீங்கள் மலர்விழி? இலங்கைப் பத்திரிகைகள் படித்தீர்களா?

இல்லைச் சுமதி.

உங்களுடைய ஆக்கம் ஒன்று பத்திரிகையில் படித்தேன்.

அப்படியா?

பாராட்டுவதற்காக எடுத்தேன். நன்றாக எழுதியிருக்கிறீர்கள். தொடர்ந்து எழுதுங்கள்.


பலதையும் பட படென்று பேசிக்கொண்டிருந்தாள் சுமதி.

நன்றி சுமதி. வாசித்துப் பாராட்டுவதற்கு ஒரு பெண் லண்டனில் இருப்பது மகிழ்ச்சியான விடயம்தான். என்ன அப்படி ஒன்றும் பெரிதாக ஆய்வு செய்து நான் எழுதவில்லை. பார்த்து மகிழ்ந்ததை எழுதினேன்.

'பிசி பிசி' என்று சொல்லும் இன்றைய உலகத்தில் உங்களைப்போல யார்தான் தொடர்ந்து எதையாவது எழுதிக்கொண்டிருக்கிறார்கள்?

மலர்விழி சந்தோஷப்பட்டுச் சிரித்துக் கொண்டாள்.

நீங்கள் எழுதுவது பற்றி இலக்கியத்தில் ஆர்வம் உள்ள ஒரு பெண்ணோடு பேசினேன். இவ்வளவு தூரம் குடும்பப் பொறுப்போடும் ஒரு பெண் சும்மா அது இது என்று லண்டன் நிகழ்ச்சிகள் குறித்து எல்லாம் எழுதுவதும் ஒரு சாதனை என்றேன்.



'திருமணம் புரிந்து இரண்டு பிள்ளைகளை நான் பெற்றதுதான் எனக்குப் பெரிய சாதனை. மலர்விழி என்ன ஆறு வருடங்களுக்கு முன்னர் தொலைக்காட்சியில், வானொலியில் பேசியதைத்தானே ஏதோ புத்தகத்திலும் எழுதியிருக்கிறார். அதில் என்ன பெரிய சாதனை இருக்கிறது?' என்றார். இலக்கியத்தில் தோய்கின்றவரே இப்படிப் பதிலாகக் கூறியது இன்னும் எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது மலர்விழி!

அது பற்றிய கவலை தேவையில்லை சுமதி. அப்படிக் கதைப்பது அது அவர்களுக்குரிய சுதந்திரம். மற்றவர்கள் எனது செயலைப்பற்றி என்ன சொல்கிறார்கள் என்பது குறித்து நான் கவனத்தில் எடுப்பதில்லை.

மலர்விழி! எங்களைப் போன்ற நண்பிகள் உங்களை உற்சாகப்படுத்த இருக்கிறோம் தானே! ஒரு பெண்ணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு ஆண் இருக்கும் என்பார்கள். உங்களுக்கும் அப்படித் தானே! ஒரு ஆண் இருக்கிறார் தானே!

போங்கள் சுமதி. ஒரு புண்ணாக்கும் இல்லை. ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னாலும் இருப்பது அவமானம்தான். அடிவாங்குகின்ற தோல்விகள் தான். வலியும் கண்ணீரும்தான். பார்த்தீங்களா சுமதி! நீங்கள் மகிழ்ந்து சொன்ன விடத்தை நல்லவர்கள் போன்று பழகுகின்றவர்களே தங்கள் மனக்கோலத்தை எப்படி வெளிப்படுத்துகின்றார்கள் என்று. மற்றவர்களைத் தட்டிக்கொடுக்கிற பழக்கம் எங்கள் சமுதாயத்தில் மிகக் குறைவாக இருப்பதால் தானே நாங்கள் முன்னேறாமல் இருக்கிறோம். மனித உருவங்களின் அகமும் புறமும் வேறுபாடுகொண்டவை சுமதி! சுமதி உங்களுடன் தொடர்ந்து பேச விருப்பமாகத்தான் இருக்கிறது.

ஆனால், புஷ்ரா என்ற அன்ரியோடு இன்று மாலை விழா ஒன்றுக்குச் செல்வதற்காக ஆயத்தமாகிக் கொண்டு இருக்கிறேன் சுமதி. பின்னர் உங்களோடு போன் செய்து கதைக்கிறேன்.

அப்படியா! நல்ல பொழுதாக அமையட்டும் மலர்விழி!

புஷ்ரா அன்ரியோடு முன்வரிசை மேசையில் மலர்விழி அமர்ந்துகொண்டது நல்ல சந்தர்ப்பமாக அமைந்தது.

'இதுவரை காலமும் எத்தனையோ அழைப்புகளுக்கு இங்கு வந்திருக்கிறேன். இப்படியான இடம் அமைவதில்லை. மலர்விழியோடு வந்தபடியாலாக்கும், உங்களின் முக மலர்ச்சியாக்கும், முதல்வரிசை மேசை கிடைத்துள்ளது' புஷ்ரா அன்ரி மலர்விழியின் காதுக்குள் கூறிக்கொண்டார்.

மலர்விழியும் புஷ்ரா அன்ரியும் சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டே பெயரிடப்பட்ட முன்வரிசையில் அமர்ந்துகொண்டார்கள்.

எல்லாவற்றையும் மிகக் கவனமாக அவதானிக்க முடிந்தது. ஹரோப் பகுதியில் இலவசமாக சமூக நலன்களில் ஈடுபட்டு வரும் பல்வேறு இன மக்களையும் கௌரவித்து ஹரோ மேயரும், சட்டத்துறையில் இருப்பவர்களும் சேர்ந்து கௌரவிக்கின்றனர். என்ன ஆச்சரியம்! மலர்விழியும் அந்தப்பட்டியலில் அழைத்துக் கௌரவம் செய்யப்படுகிறாள். புஷ்ரா அன்ரியும் ஆச்சரிய விழிகளால் மலர்விழியை நோக்கினாள். எதிர்பராத வண்ணம்! விருது வழங்குவது! நம்பவே முடியவில்லை. வாழும்போதே வாழ்த்துகின்ற மிகப் பெருந் தன்மை! அதுவும் லண்டன வாழ்; மக்களால் வாழ்த்தப்படுவது மலர்விழியால் நம்பவே முடியவில்லை. பல்நாட்டு மக்களும் இனவேறுபாடின்றி குழுமியிருந்து மகிழ்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் பாடசாலைகள் நடாத்துவோரில் சிலரையும்; அழைத்து கௌரவிக்கிறார்கள்.

ஹரோ வட்டாரத்திலுள்ள முக்கியமான ஆங்கிலப் பிரமுகர்களும், அதிகாரிகளும் குழுமியிருக்கிறார்கள். அவர்களை நேரில் பார்க்கும் சந்தர்ப்பமும் சந்தோஷத்தைக் கொடுத்தது மலர்விழிக்கு! மலர்விழியின்; மேசையில் இருந்த ஆங்கிலேயர்கள், கறுப்பு இன மக்கள், ஆசிய நாட்டவர்கள் எல்லோருமே உணவுகளையும், வைனையும் குடித்துக் கொண்டு பேசிக்கொண்டனர். பாடியும் ஆடியும் மகிழ்கின்றார்கள். அவர்களின் இனிமையான பேச்சும், புன்சிரிப்பும், கைகுலுக்கும் விதமும், உடல்வாகும் மலர்விழியைக் கவர்ந்துவிட்டது. மலர்விழியும் அவர்களோடு இணைந்து மகிழ்ந்துகொள்கிறாள். ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர் மாதிரி பழகுகிறார்கள்தானே! எல்லோரையுமே நாம் அணுகும் விதத்தில்தான் இருக்கிறது. எல்லோரும் அருமையான மனிதர்கள்தான். மலர்விழி மனதில் புனலாகி ஓடுகிறது.

புஷ்ரா அன்ரி தன் இருப்பிடத்தில் உட்கார்ந்துகொண்டே கவனித்து ரசித்துக்கொண்டிருந்தார்.

பரவிக்கொண்டிருக்கும் குளிரால் நான்கு மணிக்கே இருள் சூழத்தொடங்கிவிட்டது. இருந்தும் மகிழ்ச்சிகரமான நேரப் பொழுதுகள் கலகலத்துக் கொண்டிருக்கிறது. சலசலக்கும் இலைகள் போன்ற குதூகலமான குரல்களுக்கு வாழ்த்துக்களுடன் விடை கொடுக்கின்றார்கள் மலர்விழியும் புஷ்ரா அன்ரியும். புதிய அனுபவமொன்றின் முகமலர்வோடு தத்தமது வீடு நோக்கி நெருங்குகின்றார்கள்.

மனதுள் பொங்கிப் பொழிந்த மகிழ்ச்சியில் திளைத்த மலர்விழியை அமைதியாகக் காத்திருந்த வீடு மௌனமாக விரிந்து உள்வாங்கியது. கேலியும் குத்தலும்ஞ் பொருமிக்கொண்டு மீண்டும் அவள் அந்த வீட்டில்.

*01.02.1918.*



# பெற்ற பிள்ளை கொடுப்பரோ?

அரசகுமாரன் ஒருவன் வேட்டைக்குச் சென்றான். காட்டுக்குள் அவன் சென்றபோது, அழகான ஓர் இளம் பெண்ணைக் கண்டான். அரசகுமாரனுக்கு அவளை மிகவும் பிடித்துவிட்டது. அவள் அழகில் மயங்கினான். அப்படியொரு அழகியை அவன் எங்குமே பார்த்ததில்லை. அவள் அவ்வளவு அழகாக அவனுக்குத் தெரிந்தாள். அரண்மனைக்குத் திரும்பிய அவன், தன் தந்தையை அணுகி, தான் காட்டிலே கண்ட பெண்ணைப்பற்றி விவரித்தான். தனக்கு அவளைப் பிடித்திருப்பமாகவும் தான் அவளை மணம்புரிய விரும்புவதாகவும் தெரிவித்தான்.

தனயனின் விருப்பைக் கேட்ட தந்தை, தன் மகனைப் பயித்தியமாக்கிய அந்தப் பெண் யாரென அறிந்துவரும்படி ஒற்றர்களை அனுப்பினான். சென்ற ஒற்றர்கள், அவள் அந்தக் காட்டிலுள்ள வேடுவ அரசனின் மகள் என்று அறிந்து, தாம் அறிந்ததை அரசனுக்குத் தெரிவித்தார்கள். உடனே அரசன் அந்த வேடுவத் தலைவனிடம் தன் மகனுக்குப் பெண் கேட்டுத் தூது அனுப்பினான்.

தூதுவன் வேடுவனிடம் சென்று அரசர் கொடுத்த ஓலையைக் கொடுத்து, அரசர் தன் மகனுக்கு வேடுவனின் மகளைப் பெண்கேட்பதாகவும் சம்மதம் பெற்றுவரும்படி அரசர் கூறியதாகவும் சொன்னான். அதைக் கேட்ட வேடுவனுக்குக் கோபம் வந்துவிட்டது. அவன் தூதுவனைப் பார்த்து,

“தன் மனைவியை விற்றது யார்? அரிச்சந்திரன் என்ற அரசனல்லவா தன் மனைவியை விற்றான். பாதித் துகிலுடன் காட்டிலே தன் மனைவியை அழவிட்டுச் சென்றவன் யார்? நளன் அல்லவா அந்தச் செய்கையைச் செய்தவன். இராமன் என்ன செய்தான்? தன் மனைவியைச் சிறையெடுக்க விட்டான் அல்லவா? பாண்டவர்கள் என்ன செய்தார்கள்? தங்கள் மனைவியின் துகிலை ஒருவன் உரிய, பார்த்துக்கொண்டு எந்தவித நடவடிக்கையும் எடுக்க இயலாமல், பார்த்துக்கொண்டு சும்மா இருந்தார்கள் அல்லவா? இவர்களெல்லாம் அரசர்கள் அல்லவா?” என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டுபோனான்.

பதில் தெரியாமற் தூதுவன் விழிக்க, வேடன் தொடர்ந்து பேசினான். “என்ன துணிவில் என்னிடம் பெண்கேட்ட வந்தாய்? இவ்வளவு நடந்தபின்னரும் அரசர்கள் பெண்கேட்க வரலாமா? பெண் கேட்டவனின் முகத்திலே எச்சிலை உமியடா! திருமணம் என்று பேசிய வாயைக் கிழியெடா! என்றெல்லாம் கோபமாகப் பேசுகிறான் அந்த வேடுவர் தலைவன்.

“சிவபெருமானே ஒரு காலத்தில்




எங்கள் எச்சில் உணவை உண்டார், (கண்ணப்பன் என்ற திண்ணனார் சுவைத்துப் பார்த்துக் கொடுத்த உணவை) அப்படி உண்டபின், போனால் போகட்டும் என்று, அவரின் மகனான வேலருக்கு நாம் ஒரு பெண் கொடுத்தோம். அந்தப் பெண் எங்கள் வளர்ப்புப் பெண். சொந்தப் பெண்ணல்லள். பெற்ற பிள்ளையென்றால் கொடுத்திருக்கமாட்டோம். உங்களுக்கென்ன, பேயா பிடித்துவிட்டது?'' என்கிறான் வேடன். "நாங்கள் யாரென்று தெரியுமா? வெங்கை நாட்டிலே வாழுகின்ற வேடர்கள். எங்கள் குலம் என்னவென்று தெரியுமா?'' என்கிறான் அவன்.

இதை அழகான கற்பனைச் சம்பவத்தை பாடலாகத் தந்திருக்கிறார் ஒரு புலவர். திருவெங்கைக் கலம்பகத்திலே இப்பாடலைப் பார்க்கலாம். கற்பனையுடன் கருத்தும் மிக்க ஒரு பாடல். அந்தப் பாடல் இதோ!

விற்றதார் கலைபாதியோடு வனத்திலே அழவிட்டதார்
வெஞ்சிறை புகவிட்டதார் துகிலுரிய விட்டு விழித்ததார்
உற்ற தாரமும் வேண்டுமென்றினி மன்னர் பெண்கொளல் ஒண்ணுமோ
உமியெடா மண மென்ற வாய்கிழித்து ஓலைகாற்றில் உருட்டடா
வெற்றியாகிய முத்தி தந்தருள் வெங்கை மாநகர் வேடர்யாம்
விமலரானவர் எமையடுத்து இனிதெங்கள் மிச்சில் மிசைந்தபின்
பெற்றவேலர் தமக்கு யாமொரு பெண்வளர்ப்பினில் ஈந்தனம்
பெற்ற பிள்ளை கொடுப்பரோ ஈதென் பேய் பிடித்திடு தூதரே

திருவெங்கைக் கலம்பகம் என்ற நூலை இயற்றியவர் சிவப்பிரகாசசுவாமிகள். இவர் பல சுவையான பாடல்களை யாத்துள்ளார். படிக்கப் படிக்க இன்பம் பயப்பவை அவை.

# இலவச திருமண சேவை



## மணமகன் தேவை

39 வயதான தனது சுவாதி நட்சத்திரத்தில் பிறந்த நல்ல மதிப்பான உத்தியோகத்தில் உள்ள பிரிதானிய பிரசா உரிமைகொண்ட பெண்ணுக்கு தகுந்த மணமகனை தந்தையார் தேடுகிறார்.

தொடர்புகள்: தமிழர் தகவல்

## மணமகன் தேவை

லண்டனில் பிறந்த 25 வயதான பல் டாக்டர் தொழில் புரியும் தனது மருமகளுக்கு நல்ல மதிப்பான உத்தியோகத்தில் உள்ள பிரிதானிய பிரசா உரிமைகொண்ட தகுந்த மணமகனை மாமனார் தேடுகிறார்.

தொடர்புகள்:
தமிழர் தகவல்

# மூதுரை



## படித்து அறிந்தவர்

கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம் - மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்.

படிக்காத மக்களுக்குப் படித்து அறிந்தவர்களின் சொல்லானது எமன் போன்றதாகும். நேர்வழி வாழாதவர்க்கு தரும தேவதையே எமனாகும். மென்மையான வாழை மரத்திற்கு தான் பெற்ற காயே எமனாகும். இல்லத்தில் பொருந்தி வாழாத பெண்ணுக்கு அப்பெண்ணே அவளுக்கு எமனாவாள்.

(கருத்து - மூடர்களுக்கு அறிஞர்கள் சொல் துன்பத்தைத் தரும். பாவிகளுக்கு அறமே துன்பத்தைத் தரும். வாழைக்கு அதன் காயே துன்பத்தைத் தரும். வீட்டிற்கு அடங்கி நடக்காத பெண் துன்பமடைவாள் என்பதாம்)


# இலங்கை நீர்கொழும்பு வயோதிபர் இல்லத்திற்கு நிதி சேர்த்தல்

ஆதரவற்ற, கைவிடப்பட்ட வயோதிபர்களைப் பராமரிப்பதற்கு இல 100 கடற்கரை தெரு, நீர் கொழும்பு இலங்கையில் இலவச வயோதிபர் பராமரிப்பு இல்லம் ஒன்றை அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியாஸ்திரிகள் சபை ஆரம்பிக்க உள்ளது. இதற்கு இலங்கை ரூ 40 மல்லியன் தேவைப்படுகிறது. ஆரம்பத்தில் 60 முதியோர்கள், அதன் பின்பு அதிகரிக்க உள்ளோம்.

இச்சபை, இல 201/1 மகாவத்தை கொழும்பு 14இல் கடந்த 40 வருடங்களாக "அன்பு இல்லம்" என்ற பெயரில் இலவச வயோதிபர் இல்லம் ஒன்றை நாடாத்தி வருகிறது. இங்கே தற்பொழுது பல இன மதங்களைச் சேர்ந்த ஆண், பெண் முதியோர் 60 பேர் பராமரிக்கப்படுகின்றனர். கடவுளின் கிருபையால் கருணை உள்ளம் படைத்தோர் நன்கொடையில் இவர்களின் லௌகீக, ஆத்மீக தேவைகளை சிறப்பாக கவனித்து வருகிறோம்.

நீர்கொழும்பில் புதிய வயோதிபர் இல்லம் ஒன்றை ஆரம்பிப்பதன் நோக்கம் இங்கே ஆதரவின்றி கைவிடப்பட்டு கஷ்டப்படும் வயோதிபர்கள் பலர் உள்ளனர். இவர்கள் மீது அனுதாபம் கொண்டு உதவ விரும்புவோர், கீழே ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள வங்கி கணக்கிற்கு தங்கள் நன்கொடைகளை அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியாஸ்திரிகள் சபை கடந்த 90 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் சேவையாற்றி வருகிறது. அதன் தலைமையின் வழிகாட்டலில் தற்பொழுது 41 கன்னியாஸ்திரி மடங்கள், 23 பாடசாலைகள், 20 இளைஞர் இல்லங்கள் இன்னும் பாலர்கள், முதியோர்கள் இல்லங்களையும் நடத்தி வருகிறது. மக்கள் சேவையே அதன் இலட்சியம், மேலதிக விபரம் வேண்டுவோர் கீழே ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள கன்னியாஸ்திரிகளைத் தொடர்பு கொள்ளவும்.



# Request for Funds to Elders Home in Negombo, Sri Lanks

Apoatobic Carmel Sisters in Sri Lanka are about to start a Charitable Elders House at No. 100, Sea Street, Negombo, Sri Lanka for the benefits of deserted and destitute elders. This is our Second Project costing SL. Rs. 40 Million to accommodate 60 Elders at the start and to increase the number later.

Our First Project for Elders, under the name "Home of Compassion" has been functioning at No. 201/1, Mahawatta, Colombo 14 for the last 40 years. Presently there are 60 Elders, both males and females of all casts races and religions. With the Grace of God and with well wishers `supports and public donations, we run this Home and look after the elders' physical and spiritual needs to the best of our abilities.



Negombo is selected for our Second Project where several elders suffer without any care and attention. Those who sympathise with them and wish to help them are kindly requested to send their contributions to the Credit of Account No. 107320117170 at the MUTUWAL Branch of NATIONAL SAVINGS BANK, Sri Lanka operated in the name of HOME OF COMPASSION, No. 201/1, Mahawatta, Colombo, 14, Sri Lanka.

The Congregation of Apostolic Carmel Sisters counting over 90 years of service in Sri Lanka presently run 41 convents, 23 schools, 20 children homes and homes for babies and elders in all parts of Sri Lanka under the guidance of Provincial Superior. Our Mission is to serve humanity.

Contributors can contact the following to get more details, if required:

(1) **Rev. Sister Rubika AC,**

Provincial Superior

Tel. : +94714524855

maryrubika@gmail.com

(2) **Rev. Sister Gnanadarshini AC,**

Bursar,

Tel. : +94772792848

Marygnana@gmail.com

(3) **Rev. Sister Mena,**

Superior Elders Home

Tel. : +94112522893

(4) **THE APOSTOLIC CARMEL**

Tel: +94112695045

acphsrilanka@gmail.com

# ஆன்மிகவாதிகளுக்கு
# அரிய சந்தர்ப்பம்

*தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் திருவிழா காலங்களில் சுவாமியை தரிசிக்கும் வாய்ப்பை நீங்கள் அடைய வேண்டுமா?*



## திருவிழா – சுற்றுலா

மார்கழி மாதம் 6ஆம் திகதி புறப்பட்டு மார்கழி 16ஆம் திகதி வரையிலான திருவிழா சுற்றுலா - திருவண்ணாமலையும் - அத்துடன் ஆறுபடை முருகன் கோவில்கள், மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் தரிசனமும் குறிப்பிட்ட இருக்கைகள் உள்ளதால் உங்கள் இருக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு

**World Travel & Tour**

**020 84659888**

**020 84659666**



# அய்யன் திருவள்ளுவர் தமிழ் மன்றம்

## வழங்கும்

## மாதம் இரண்டு திருக்குறள்



**கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை**
**உண்மையான் உண்டிவ் வுலகு.**

இந்த உலகம்,
அன்பும் இரக்கமும்
இணைந்த கண்ணோட்டம்
எனப்படுகிற பெரும் அழகைக் கொண்டவர்கள்
இருப்பதால்தான் பெருமை அடைகிறது.

**கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்**
**உண்மை நிலக்குப் பொறை.**

அன்புடன் அரவணைத்து
இரக்கம் காட்டும் கண்ணோட்டம்
எனப்படும் உலகியலுக்கு,
மாறாக இருப்பவர்கள்
இந்தப் பூமிக்குச் சுமையாவார்கள்.




இந்தத் திருக்குறள் நூலை லண்டனில் பெற
தமிழர் தகவல் இதழைத் தொடர்புக்கொள்ளுங்கள்

**விலை. 2 பவுண்ட் மட்டும்**



Happy Akshaya Tritiya

லூசியத்தில் தரமான நகைக்கடை

தினேஷ்

ஜுவல்லரி டெக்ஸ்டைல்ஸ்

Thinesh

Jewellers & Textiles

276, Lewisham High Street
Lewisham
London SE 13, 6JZ
Tel : 020 8613 9569
www.thinesh-jt.com

லூசியத்தில் முதலாவது தமிழ்க்கடை

கற்பகம்

தங்கள் சேவையை விரிவாக்கியுள்ளார்கள்

KATPAKAM

உடன் காய்கறிகள், பழ வகைகள்
உடன் பங்கு இறைச்சி
தமிழ் ஆடியோ, வீடியோ தமிழ்படங்கள்
அனைத்தும்ஒரே இடத்தில்



36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
Tel : 208 694 88 10


Best Food
11-13 Ealing Road Wembley
Middlesex HAO 4AA Tel : 0208 9000100
364 - 366, Bath Road, Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002, Fax : 020 8570 2323
259 - 261, London Road West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269, Fax : 684 4677
எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொருமாதமும் அதிரடி மலிவு விற்பனையாக
பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று
மலிவு விலை பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை சேமியுங்கள்

தானாக உயர்வதுதான்
வயது
விடாமல் துரத்துவதுதான்
காலம்
தடுக்கமுடியாததுதான்
நேரம்
கடக்கத் துடிப்பதுதான்
இளமை
தொடவேண்டியதுதான்
இலக்கு

இத்தனையும் தான்
**வாழ்க்கை**













செல்வராஜா கோல்ட் ஹவுஸ் &
டெக்ஸ்டைல்ஸ்
SELVARAJA GOLD HOUSE & TEXTILES
£ 300க்கு மேல்
நகை வாங்குவோருக்கு
லட்சுமி தங்கக் காசு
இலவசம்
உங்களிடம் இருக்கும் பழைய தங்கத்திற்கு அதிகூடிய விலையில் உடன் பணம்.
சொற்ப கூலியை மட்டுமே செலுத்தி புதிய நகைகளை பெற்றுக்கொள்ளலாம்.
எங்களிடம் தாலிக்கொடி செய்பவர்களுக்கு கூறைப்புடவைகள், பட்டுப் புடவைகள் 50% விலைக்கழிவில்.
புதிதாக ஆரப்பிக்கப்பட உள்ள சீட்டுத் திட்டத்தில் இணைந்து நீங்களும் ஓர் அதிர்ஷ்டசாலி ஆகுங்கள்.
162 B Mitcham Road London SW17 9NJ
Tel : 208 767 3795 Mobile : 078 25005269

Ilford பகுதியில் புதிய பல்பொருள் அங்காடி

# SRI STORE

இது காலமும் SRI FOOD & WINE
என்ற பெயரில் இயங்கிய எமது கடை
புதிய பெயரில் தொடர்ந்து தங்கள் சேவைக்காக

**396-400 Ilford Lane**
**Town Centre Ilford, IG1 2NB**
**Tel : 020 8553 7737**



# SUN MOTORS



Mechanical / Body Repairs /
Recovery / Tyres

**Tel : 02086920232**

R/O 26 Loampit Hill
Elswick Road, Lewisham
London, SE 13, 7SW

## லண்டனில் 35 வருடமாக இறக்குமதியாகும் தமிழர் உணவு வகைகள்

லீலா
தயாரிப்புகள்

*உற்பத்தியில் பெருமை, உபயோகிப்பதில் ஆனந்தம்*

புலம்பெயர்ந்த ஈழ மக்கள் இலண்டனுக்கு வந்த காலம் தொட்டு இன்று வரைக்கும்
தொடர்ந்து இலண்டனில் விற்பனையாகும் லீலா தயாரிப்புகள்.

# Vaani Foods

லண்டன் ஏக விநியோகஸ்தர்கள்

தொலைபேசி இலக்கம்
**0208 668 7648**


SURYAA
CURRY LEAVES
PEPPER
CUMIN
FENNEL
TURMERIC
CLOVE
RAMPE
CINNAMON
4 TYPES OF CHILLIES
FENUGREEK
CORIANDER
FENNEL
BEST SELLER
100% NATURAL
NO ARTIFICIAL COLOURS
NO ARTIFICIAL FLAVOURS
CHILLIES 4 BLEND
The Right Choice
SURYAA
ROASTED CURRY POWDER
MILD
HOT
EXTRA HOT
500g
900g
3 Kg

உங்கள் திருமணத்தின் ஏழு வைபவங்களையும்
ஆரெம்கேவியின் பட்டோடு கொண்டாடுங்கள்

93 years of silk heritage

RmKV Wedding Silks

Bridal Seven



சென்னை : ஃபோரம் விஜயா மால், வடபழனி • ஃபீனிக்ஸ் மார்கெட் சிட்டி, வேளச்சேரி • பனகல் பார்க், தி. நகர்.
திருநெல்வேலி : வண்ணார்பேட்டை • வடக்கு ரத வீதி, திருநெல்வேலி டவுண்.
கோயம்புத்தூர் : ப்ரூக்ஃபீல்ட்ஸ், ப்ரூக்பாண்ட் ரோடு | பெங்களூரு : ஓரையன் மால். ராஜாஜி நகர்.

toll free no.: 1800 425 3105 shop online at: www.rmkv.com write us at: bonus@rmkv.com follow us on /rmkvsilks

# கணேஷா தமிழ் கடை

## Ganesha Asian Supermarket

433 Bromley Road Downham BRI 4PH

020 8698 0990


Lewisham, Catford
Downham, Bromley
வாழ் மக்களுக்கு
ஒரு
புதிய உதயம்

- இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்
- மளிகைப் பொருட்கள்
- மரக்கறிகள் பழங்கள்
- உடன் மீன் இறைச்சி வகைகள்
- குடிபானங்கள்
- வீட்டு உபயோகப் பொருட்கள்
- பூஜைப் பொருட்கள்



**அனைத்தையும் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்**

விசேட விலைச்சலுகையில் ஏராளமான பொருட்கள்
இன்றே விரையுங்கள்


லண்டனில் No1
நகை மாளிகை
Lakshmis
Jewellers
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை